24-2-1952 M.Y.M BANGALORE.2

# போர்வாள்


வாள் 5 வீச்சு 22

23-2-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:
காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2


# தேவை! தேவை! அவசரமாகத் தேவை!

தேவை—தேவை — அவசரமாகத் தேவை என்று அபாயக்குரல் எழுப்பியிருக்கிறது சென்னைத் தினசரிகளில் ஒன்றாகிய "தினமணி."

அப்படி என்ன தேவைப்படுகிறது தினமணியாருக்கு அவ்வளவு அவசரமாக என்று கேட்கிறீர்களா?

நாட்டுக்கு ஒரு நல்ல ஆட்சி தேவை என்று கேட்டிருக்கிறதா "தினமணி"?

இல்லை!

ஆறவுன்ஸ் அரிசி போதாது—பதினாறு அவுன்ஸ் தேவை என்று அவசரக் குரல் எழுப்பியிருக்கிறதா "தினமணி"?

கிடையாது!

பஞ்சத்தால் அடிபட்டு, பசிப் பிணியால் வேதனைப்பட்டு, கண்ணீர்த் துளிகள் சிந்தியபடி கிடக்கிறார்களே கைத்தறி நெசவாளர்கள்—அவர்களுடைய வேதனையைத் தீர்க்க ஒரு திட்டம் தேவை என்று கூறியிருக்கிறதா "தினமணி"?

அதுவுமில்லை!

'சக்திக்கேற்ற உழைப்பு—தேவைக்கேற்ற ஊதியம்' என்கிற பொதுவுடமைக் கீதத்தை நடைமுறை நாதமாக்கும் துணிச்சல் நம் ஆளவந்தார்களுக்குத் தேவை என்று எழுதியிருக்கிறதா தினமணி?

கிடையாது—கிடையாது!

சென்னை நகரிலேயும் வேறு பல வட்டாரங்களிலேயும் பொதுமக்களின் துயரத்தை மேலும் மேலும் வளர்த்துவரும் வீட்டு நெருக்கடி தீர ஒரு பரிகாரம் தேவை என்று தீட்டியிருக்கிறதா தினமணியாரின் எழுதுகோல்?

அதெல்லாமில்லை!

பிச்சைக்காரர்கள் என்றோர் கூட்டம் நம் நாட்டில் இருப்பதே நம் பண்பாட்டிற்கு இழுக்கு; நம் சமுதாயத்திற்கு அவமானம்; ஆகவே பிச்சை எடுத்தே வாழ வேண்டிய நிலை எவருக்கும் இல்லாதபடியான ஒரு புதிய சமுதாயம்—ஒரு புதிய வாழ்வு தேவை என்று உரத்த குரலில் உன்னத இலட்சியம் ஒன்றை நடமாடவிட்டிருக்கிறதா "தினமணி",?

அப்படியுமில்லை!

பிறகு என்னதான் தேவையாம் தினமணியாருக்கு?

ஒரு பஜனை மடம்!

சிரிக்காதீர்கள் தோழர்களே சிரிக்காதீர்கள்!

தினமணியாருக்கு அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுவது ஒரு பஜனை மடம்தானும்!

நெசவாளர்களின் கண்ணீரைத் துடைப்பது, விவசாயிகளின் வேதனையைக் குறைப்பது, பாட்டாளிகளின் துயரத்தை ஒழிப்பது, மத்தியதர வகுப்பினரின் சஞ்சலங்களைப் போக்குவது, ஆறவுன்ஸ் அரிசிக் கொடுமையைத் தீர்ப்பது, வீட்டு நெருக்கடிக்கு ஒரு பரிகாரம் தேடுவது,—இந்தத் திட்டங்களெல்லாம் அவசரமாகச் செய்துமுடிக்கப்படவேண்டிய அருமையான செய்கைகளாகத் தோன்றவில்லை தினமணியாருக்கு!

அவருக்கு எப்படித் தோன்றும்? அவர்தான் பெருமுதலாளி கோயங்காவின் செல்லப்பிள்ளையாயிற்றே! கோயங்காவின் பின்னிருக்கு ஏழைகளின் கண்ணீர் தெரியமுடியுமா? சீமான் வீட்டு மோட்டார், அந்த மோட்டாரிலிருக்கும் மங்கை, அந்த மங்கையின் மேனியை அலங்கரிக்கும் அலங்கார ஆடை, அந்த ஆடையில் ஜொலிக்கும் பளபளப்பு, அந்த பளபளப்பைக் கண்டு மயங்கியபடி அருகே வீற்றிருக்கும் எஜமான், அந்த எஜமான் மாலைவேளைகளில் செல்லும் பஜனை மடம் — இவைகள்தானே தெரியும் அவருக்கு!

அதுதானே இயற்கைகூட!

தினமணியார் பஜனை மடம் தேவை என்று கூவுகிறார்—அதிலே ஆச்சரியம் என்ன இருக்கிறது!

தினமணி, முதலாளித்வத்தின் சின்னம்.

பஜனைமடம், மதமாயையின் உருவம்.

முதலாளித்வம், மதமாயை, இரண்டும் மிக நெருங்கிய தொடர்புடையவை. ஒன்றால் ஒன்று தழைப்பவை.

முதலாளித்வம் தழைத்து ஓங்கி வளரவேண்டுமானால் மதமெனும் மாயை பரவிப் பெருகி எங்கும் நிறைந்திட வேண்டும்.

அதுபோலவே மதமெனும் மாயை அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகமாய் நீக்கமற நிறைந்திட வேண்டுமானால் முதலாளித்வம் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றிடாக வேண்டும்,

முதலாளித்வம் சரிகிறது என்றால் மதம் விழ்கிறது என்று பொருள். மதம் ஒழிகிறது என்றால் முதலாளித்வம் தொலைகிறது என்று அர்த்தம்.

உழைத்து உழைத்து உருக்குலைவான் தொழிலாளி. அந்தத் தொழிலாளியின் உழைப்பைக் கொண்டு உழைக்காமலே உல்லாச வாழ்வு வாழ்வான் முதலாளி.

"நாம் உழைக்கிறோம் ஓயாமல்! ஆனால் நமக்கோ உண்ணவும் உணவில்லை! அந்தமுதலாளியோ உழைப்பது என்றால் இன்னது என்பதையே அறிவதில்லை! ஆனாலும் ஒன்பது அடுக்கு மாடிமீது உல்லாசப் பவனி வந்தபடி இருக்கிறார்! விட்டுவைக்கக் கூடாது இந்த அக்கிரமத்தை இனியும்! போராடியே தீரவேண்டும் நம்முடைய உரிமைக்காக! உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தைப் பெற்றே தீரவேண்டும்!" என்ற எண்ணம் சில சமயங்களில் தொழிலாளிக்கு ஏற்படும்.

அப்படி ஏற்படுகிறதோ இல்லையோ, புரோகிதன், சிரித்த முகத்துடன், பூணூலை உருவியபடி, தொழிலாளியின் அருகே வருவான்.

"தம்பி! கேள்! தொழிலாளி! நீ உழைக்கிறாயப்பா! உண்மைதான்! அந்த முதலாளி உழைப்பதில்லை! அதுவும் உண்மைதான்! ஆனால் நீ ஓயாமல் உழைத்துக்கூட உனக்கு அரை வயிற்றுக் கஞ்சிக்குக்கூட போதுமான உணவு கிடைப்பதில்லை! அந்த முதலாளியோ உழைப்பதே இல்லை! என்றாலும் கூட போகபோக்கியத்தில் புரண்டபடி இருக்கிறார்! ஏன் தெரியுமோ? போன ஜென்ம பலனப்பா இது, போன ஜென்ம பலன்! நீ போன ஜென்மத்திலே பாபம் செய்தாய்! ஆகவேதான் இந்த ஜென்மத்திலே கஷ்டப்படுகிறாய்! அந்த முதலாளி போன ஜென்மத்திலே புண்ணியம் தேடிவைத்தார். அதன் பலன், இப்போது சுகப்படுகிறார்! அவரவர்கள் செய்த கர்மபலனை அவரவர்கள் அனுபவித்துத்தான் தீரவேண்டும்! கர்மபலன் யாரையும் விடாதப்பா விடாது. நீ போராடினாலும் விடாது, தொழிற் சங்கம் வைத்தாலும் விடாது, வேலை நிறுத்தம் செய்தாலும் விடாது! போப்பா போ! போய் வேலையைப் பார்! இந்த ஜென்மத்திலே, அடக்க ஒடுக்கமாக இருந்து, தப்புதண்டா செய்யாமல், ஒழுங்காக வேலையைப் பார்த்தா, அடுத்த ஜென்மத்திலே சுகப்படுவே! இல்லே! அடுத்த ஜென்மத்திலே ஆடாகவோ மாடாகவோ பிறந்து மேலும் வேதனைப் படுவே!"

புரோகிதன் இதுபோலப் பேசுவான். தொழிலாளி பயந்தே போய்விடுவான்—அவன் தலைவிதி தத்துவத்தை நம்புபவனாக இருந்தால்!

தன்மீது சீறிப் பாய்கிற தொழிலாளர்களின் கோபத்தை அடக்கி அழித்துவிடுகிற அற்புதமான சக்தி படைத்த அருமையான ஆயுதமாக இருக்கிறது தலைவிதி தத்துவம் என்பதை முதலாளி நன்றாக உணர்ந்துகொண்டிருக்கிறான்.

எனவேதான் அவன், தலைவிதி தத்துவத்தைத் தழைக்கச் செய்கிற மத மாயையைப் போற்றி வளர்ப்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறான்.

தொழிலாளி இப்போது படுகிற வேதனைகட்கெல்லாம் காரணம் முதலாளித்வம் என்கிற அமைப்பு முறை அல்ல—முன் ஜென்மபலன்தான் என்று மதவாதிகள் கூறுகின்றனர்.

தொழிலாளர் போராட்டத்தின் வலிமையை மழுங்கச் செய்துவிடுகிறது இந்தக் கர்மவினை தத்துவம்.

"நியாயந்தானே மதவாதி கூறுவது! நாம் போன ஜென்மத்தில் பாபம் செய்துவிட்டு இந்த ஜென்மத்தில் சுகம் கிடைக்கவேண்டுமென்றால் எப்படிக் கிடைக்கும்? கிடைக்கத்தான் செய்யாது." என்று மத நம்பிக்கையுள்ள தொழிலாளி திடமாக நம்பத் தொடங்கிவிடுகிறான்.

அந்த நம்பிக்கை அவன் உள்ளத்திலே வேரூன்றிவிட்டால், பிறகு, அவன் எங்கே உரிமைப் போர் தொடுப்பது? முதலாளித்வத்தை முறியடிப்பது?

முதலாளித்வ ஏடு "தினமணி"க்கு இந்த உண்மைகளெல்லாம் நன்றாகத்தெரியும். தெரிந்தகாரணத்தால்தான், அது, பஜனை மடம் தேவை என்பதை இவ்வளவு அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறது.

"பஜனை மடங்கள் வளர்ந்தால் புராணக் கருத்துக்கள் தழைக்கும்—புராணக் கருத்துக்கள் தழைத்தால் தலைவிதி தத்துவம் பலம் பெறும்—தலைவிதி தத்துவம் பலம் பெற்றால் தொழிலாளர்களின் போராட்டச் சக்தி சிதையும்—அந்தச் சக்தி சிதைந்தால் நம் சுகபோகம் என்றென்றும் நிலைக்கும்."

—இதுதான் கோயங்காவின் பிள்ளை தினமணியாரின் எண்ணம்.

இந்த எண்ணம் "தினமணி"க்கு இருப்பதால்தான் 2-2-52-ம் நாள "தினமணி"யில் கீழ்க்கண்ட எழுத்துக்கள் வெளிவந்திருக்கின்றன:—

## மயிலைக்கு

## ஒரு பஜனைமடம் தேவை

"மயிலாப்பூரில் சென்ற 55 வருஷ காலமாக மாட வீதிகளில் தனுர்மாச பஜனை சிறப்பாக நடந்துவருகிறது. 1946-47-ல் பொன்விழாவும் கொண்டாடப்பட்டது. அப்பொழுதே மயிலையில் ஒரு பஜனைமடத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வற்புறுத்தப்பட்டது. எப்பொழுதும் போலவே இவ்வாண்டும் ஸ்ரீமான் கே. ஆதிவராகாச்சார் தலைமையில் பல பக்தர்கள் பஜனைக்கிரமங்களைச் சரிவர நடத்தினார்கள். ஆனால் பஜனை மடம் இன்னும் ஏற்படாமல் இருப்பது ஒரு குறை. இக் கைங்கரியத்தை விரைவில் நடத்திவைத்து, இந்த வழிபாடு, நிரந்தரமாக நடைபெறுவதற்குப் பொதுமக்கள் துணைபுரியவேண்டும்."

* * * *

முதலாளித்வம் முறியடிக்கப்பட்டு, தொழிலாளர்கள் நல்வாழ்வு பெறவேண்டும் என்கிற சிறந்த இலட்சியத்தைத் தங்களுடைய இருதய கீதமாகக் கொண்டிருக்கிற இலட்சியவாதிகள் எல்லோரும், முதலாளித்வமுறையைப்போற்றிப் பாதுகாத்து வருகின்ற தலைவிதி தத்துவத்தையும், அந்தத் தத்துவத்தின் கோட்டைச் சுவர்களாக விளங்குகின்ற வேதம்—புராணம்—சாஸ்திரம்—இதிகாசம்—ஆகியவற்றின் ஆதிக்கங்களையும் ஒழித்துக் கட்டுகின்ற சுயமரியாதைப் பணிபுரிவதைத் தங்களுடைய முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கொள்ள வேண்டும்.

2—2—52 ம் தேதி 'தினமணி' இதழின் பஜனைமடக் கூக்குரலிலிருந்து இந்த நாட்டு முற்போக்குவாதிகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது.

[வரலாற்று ஓவியம்]

# ஆரிய நீதி!

[உடுமலை குருவன்]

வேதியன் மகள்தான் அவள். ஆனால் காதல் என்ன விதிவிலக்கா அவளுக்கு மட்டும்! அவன் சூத்திரன்தான் "சொர்க்க வாயில் திறவுகோலார்தம் நீதிப்படி. ஆனால் அதற்காக காமம் அவனை விட்டு அஞ்சி ஓடிவிடுமா?

"வண்ணக்குமரியே! என் எண்ண வானில் தோன்றி விளையாடும் எழில் நிலவே" என்று அவன் கூறும்போதெல்லாம், "கண்ணாளரின் கட்டுடல் பட்டே என் உயிர் தளிர்க்கிறது! என் உள்ளத் தோட்டத்திலே உலவுகிறீர் என்றே எண்ணுகிறேன். தோட்டத்தை விட்டு ஓட்டம் பிடித்துவிட மாட்டீரே துஷ்யந்தனைப் போன்று......!" என்றெல்லாம் வேடிக்கை பேசு அந்த வேதியன் மகள்!

வேதம் ஓதினாலும், வேள்வி நடத்தினாலும், வேந்தரின் வேண்டுகோளுக்கு அருள் சுரந்து அவ்வப்போது அரசியல் ஆருடம் கணிப்பவன், வேதியன். அரசனே அவன் போட்ட கோட்டைத் தாண்டமாட்டான். அரசன் ஆற்றல் மிக்கவனாக இருந்தால் அன்பு புன்முறுவல் பூத்து நெளியும்; சூழ்ச்சி அதில் ஒளிந்து கொண்டிருக்கும்! அடி முட்டாளாக இருந்தால் 'அடா' எனக் கூறி அவன் வாழ்வும் தாழவும் தன் கையிலே இருப்பதாக 'ஆசீர் வதிப்பார்'! அரசனே ஆரியன் ஆணைக்குக் குழைந்து கொண்டிருப்பான்! மனமாற்றம் நேர்ந்த போதும், சினம் பொங்கும் போதும், வீரம் விளையாடும் போதும், ஆட்சி பற்றிய ஆராய்ச்சி நிகழும் போதும் ஆரிய வேத மூட்டையினின்றும் சாத்திரம், சம்பிரதாயம், வேதம், மனு, யாக்ஞவல்கியம், சாணக்கியம் அவிழ்த்து விடப்படும் 'அறிவுரை' வடிவில்

ஆனால் அந்த மாவீரன் அவைகளுக்கு அஞ்சுபவனல்ல! ஆங்கிலரை ஆட்டிப் படைத்தவன்! 'மைசூர்புலி' என புகழப்பட்டவன். புல்லேந்திகளின் சொல்லில் மயங்கி வீழ்பவனல்ல; புயல் முன் புமுறி என எதிரிகளை எண்ணுபவன்! ஆனால் அவன்—அந்த ஆரியனை—பூர்ணய்யாவை 'ஆலோசகனாக' வைத்துக் கொண்டிருந்தான், நச்சுப் பாம்பை வைத்துக் கொண்டிருக்கும் பிடாரனைப் போல!

அந்த வேதியனுக்கு மதிப்பு மரியாதை உண்டு, திப்புவின் அந்தப்புறத்தில் நுழையும் அளவிற்கு. அந்த வேதியன் மகள்தான் 'சாகுந்தலா' நாடகம் நடத்திக் கொண்டிருந்தாள். ஆனால், அவன் துஷ்யந்த 'மகாராசா' வல்ல! சாதாரண வீரன். மைசூர் மண்டலத்தை ஆண்டு வந்த மாவீரன் திப்புவின் கோட்டைப்பாது காவலர்களில் ஒருவன். காசிம் என்ற பெயரினன். அவளோ காட்டில் பர்ணசாலை அமைத்து வேள்வி நடத்தும் 'மகரிஷி'யின் மகளல்ல! மாவீரன் திப்புவினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட மணிமாளிகையில் முதலமைச்சன் என்ற 'முத்திரை' பொறிக்கப்பட்டு உலவும் பூசுரன் பூர்ணய்யா மகள்!

ஓர் நாள்:—

அவள் மாலைப்போதில் பொழுது போக்கவும் மலர் பறிக்கவும் கோட்டைவழியேசெல்வதுவழக்கம். காசிமுக்கு,நாள் தோறும் காணும் கட்டணமில்லாக்காட்சி அது! அவள்நடையில் பூங்கொடியின் அசைவை,சிரிப்பில் மணம் வீசும் மலரின் இதழ் விரிப்பை, பார்வையில் காதல் கனிவதைக் கண்டான்! அவன் உள்ளம் ஓடியணைக்கத் தூண்டியது. அவள் காதல் வலை வீசுகிறாள் என உணர்ந்தான். அவள் போக்கு ஒரு 'மாதிரி'யாக இருப்பினும் அமைச்சன் மகள் என்ற அச்சம் ஓர் புறம் அவன் கற்பனையை-எண்ணத்தைக் கட்டுப் படுத்தும்.

அன்று அவனுக்கு நல்ல வாய்ப்பு. மலர்க் கூடையை வைத்துவிட்டு, கோட்டையருகிலுள்ள அகழில் கைகளையும், கால்களையும்நனைத்துக் கொண்டிருந்தவள் நழுவினாள்! 'ஆ' என்று குரல் கொடுத்தாள். 'வா' எனக் குயில் கூவுகிறது என எண்ணி ஓடோடியும் வந்து, நீரில் மூழ்கா முன்பு மீட்டான்! அவன் கரங்களில் 'யாழானாள்' அவள்! இவ்வளவு நாட்கள் அவள் பார்வையால் தாக்கியதன் பொருளைப் புரிந்து கொள்ள முடிந்தது அவனால்! எதிர்பாராத இன்ப விருந்து!—இன்பக் கனவுலகத்திலே மிதந்து கொண்டிருந்தவனுக்கு, கனவு கலைந்ததும், கவலை கொள்ளு முன்பு கனவிற் கண்ட இன்பப் பொருள் கையிலே அகப்பட்டால்......! என்னென்னவோ எண்ணினான், அந்தச் சில நாழிகைகளில்! அதற்குள்ளாக அந்த மாடப்புறா தன் மாளிகை நோக்கிப் பறந்து விட்டது. அவன் மனம் சுழன்று கொண்டிருந்தது. சிந்தனையில் ஆழ்ந்தான். அதிகாரம், அமைச்சன் வடிவில் மிரட்டுவது போன்று தோன்றியது. எண்ணங்கள் அவன் உள்ளக் கடலில் தோன்றி குமிழிகளாக மாறிக் கொண்டிருந்தன. நானோ மண்டலமாளும் மன்னனின் ஏவலாள்—எடுபிடி! அவளோ அமைச்சன்—வேதியன்—திப்புவின் அரசியலைத் தாங்கும் முதல்வன் மகள்! நானோ திப்புவின் இனம்; முகம்மதியன், அவர்களால் இழைக்கப்படும் இன்னலை ஏற்க வேண்டும்; தண்டனையை தாங்க நேரிடும், என கடமையுணர்ச்சி அவன் கருத்திலே மின்னிட்டது, ஆனால் கட்டுப்படவில்லை. காரணம், கொண்ட காதல் வேட்கையின் கோளாறு அது! காதல் வேறு, கடமை வேறு எனக்கூறியது அவன் காதல் உள்ளம். உறுதி உள்ளத்தைத் தொட்டது! அவர்களிடையே இன்ப இணைப்பு சாதியைச் சாய்த்தது! மத எண்ணங்களை மாய்த்தது. மனு, வேதம், அதன் கிளைகளை யாவற்றையும் வீழ்த்தியது.

ஆனால், அதன் விளைவு...காரிகை கருவுற்றாள். கருவுற்றது கருத முடியாத வினையல்ல. எதிர்பார்த்தது தான். ஆனால் அதன் விளைவு சுற்றியுள்ளோரைச் சுடுகாட்டிற்கு அனுப்புவதாயிருந்தால்......? அவள் கருவுற்ற நிலை தந்தை பூர்ணய்யாவுக்குத் தெரிந்தது. மதிப்பை மாய்த்தாள்—பெருமையைவீழ்த்தினாள்—மதத்திற்கு மாசு—சாத்திரத்திற்குக் களங்கம்—இனத்திற்கு இழிவு-என்றெல்லாம் அவன் கூறவில்லை. சினத்தால் சிவந்து சூடேறிய கண்கள்—வியர்த்த முகம்—நெளித்த புருவம்

(6-ம் பக்கம் பார்க்க)

# வால் வளர்ந்தது! பணம் ஒழிந்தது!

கட்டாய ஆரம்ப இலவசக் கல்வித் திட்டத்தை மாகாணமெங்கும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமா?

ஒவ்வொரு கிராமத்திற்கும் குறைந்தது ஒவ்வொரு பாடசாலையாவது திறக்கவேண்டுமா?

தாலுக்காவுக்கு ஒரு சிறந்த ஆஸ்பத்திரி என்ற முறையிலாவது ஆஸ்பத்திரிகளை நாடெங்கும் நிறுவவேண்டுமா?

உங்களூருக்கு அருகே ஓடுகின்ற ஆற்றின் குறுக்கே உறுதியான பாலம் ஒன்று போடவேண்டுமா?

கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களின் சம்பளத்தைச் சிறிதளவாவது உயர்த்தி, அவர்களுடைய வாழ்க்கையை, வேதனைபுரியிலிருந்து வெளியே அழைத்துவர வேண்டுமா?

நெல்விலையைச் சற்றே உயர்த்தி, சிறிதளவே நிலம் படைத்த ஏழை விவசாயிகளின் துயரத்தைத் துடைக்கவேண்டுமா?

பசியால் துடித்துப் பட்டினி கிடந்து பரிதவிக்கும் கைத்தறி நெசவாளிக்குப் பண உதவி புரிந்து, அவன் உள்ளத்தில் கொந்தளிக்கும் வேதனையைக் குறைக்கவேண்டுமா?

சென்ற ஐந்து ஆண்டுகளாக, மக்கள் மன்றம் விடுத்துவந்த இந்த வேண்டுகோள்கள் அத்தனைக்கும், சென்னை காங்கிரஸ் ஆட்சியாளர்கள் அளித்துவந்த விடை ஒரே ஒரு வாசகம்தான்.

அந்த வாசகம், "பணமில்லையே சர்க்காரிடம் — என்ன செய்வோம் நாங்கள்?" என்பதுதான்

மக்களின் வேண்டுகோள் எவ்வளவு நியாயமானதாக இருந்தாலும் சரி, அதை உடனடியாக நிறைவேற்றியே தீரவேண்டும் என்பதற்கு எவ்வளவு காரணங்கள் இருந்தாலும் சரி, ஆட்சியாளர்கள் இந்த ஒரே வாசகத்தைத்தான் திருப்பித் திருப்பிக் கூறிவந்தனர்.

பேசுபவர் கல்வி அமைச்சராக இருந்தாலும் சரி, மராமத்து அமைச்சராக இருந்தாலும் சரி, சுகாதார அமைச்சராக இருந்தாலும் சரி அல்லது தொழில்துறை அமைச்சராக இருந்தாலும் சரி, இந்த ஒரே பதிலைத்தான் கிளிப்பிள்ளைகளைப்போல மீண்டும் மீண்டும் கூறிவந்தனர்.

சென்ற ஐந்தாண்டுக் காலத்தில், ஆட்சியாளர்கள் விதித்த புதிய வரிகளோ ஏராளம்.

அந்த வரிகளிலிருந்து சர்க்கார் கஜானாவுக்குப் பாய்ந்த பணவெள்ளமோ, பார்த்தவர் பிரமிக்கக்கூடிய அளவு உடையது.

ஏற்கெனவே இருந்த பழைய வரிகளையோ, இவர்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த பிறகு, ஒன்றுக்குப் பத்தாக உயர்த்திவிட்டனர்.

விற்பனை வரியோ, இதற்கு முன்னெல்லாம் எவரும் கேள்விப்பட்டிராத அளவு ஏராளமான வருவாயைத் தரத் தொடங்கிவிட்டது.

என்றாலும் ஆட்சியாளர்கள், எவ்வளவு இன்றியமையாத திட்டத்தையும், பணமில்லை என்ற பல்லவியைப் பாடுவதன் மூலம், சுக்கல் சுக்கலாகக் கிழித்துக் குப்பைக்கூடையில் போடுவதற்கு ஒருநாளும் தயங்கியதில்லை.

பணவருவாயோ ஏராளம்! ஆனால் முக்கியமான செலவினங்களுக்கோ, பணமில்லை என்ற பல்லவி!

இதற்குப் பெயர்தான் சென்ற ஐந்தாண்டுக்கால காங்கிரஸ் ஆட்சி!

பணம் ஏராளமாகக் கிடைத்தும் பசியையும் பஞ்சத்தையும் போக்குவதற்குக்கூட பணமில்லை பணமில்லை என்று ஆட்சியாளர்கள் பஞ்சப்பாட்டு பாடிவந்ததற்குக் காரணம், கிடைத்துவந்த பணத்தையெல்லாம் இவர்கள் வீணுக்கு இறைத்துவந்ததுதான்.

காங்கிரஸ் தர்பாரில், பணம், எப்படி எப்படியெல்லாம் வீணாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு எண்ணற்ற எடுத்துக் காட்டுகளைக் காட்ட முடியும்.

இந்த இதழில் ஒரே ஒரு உதாரணத்தைமட்டும் தருகிறோம்.

சென்னை காங்கிரஸ் மந்திரிகள் அடிக்கடி டில்லி தேவதைகளிடம் சென்று "சாஷ்டாங்க நமஸ்காரம்" செய்துவிட்டு வர வேண்டியிருக்கிறதல்லவா?

அதற்காகத்தான் போலிருக்கிறது, தங்களுடைய பிரயாணத்திற்கென்று, தனியாக ஓர் ஆகாயவிமானம், சர்க்காரின் சொந்தப் பொருளாக இருக்க வேண்டியது அவசியம் என்று சென்னை மந்திரிகள் 1948-ல் முடிவு செய்தார்கள்.

அந்த முடிவுக்கு இணங்க, அந்த ஆண்டிலேயே, இங்கிலாந்திலுள்ள ஒரு கம்பெனியாரிடம், ஓர் ஆகாய விமானத்தை 2,65,490 ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கினார்கள்.

வாங்கிய விமானத்திற்கு 'ஹனுமான்' என்கிற பட்டத்தைச் சூட்டினார்கள்.

அந்த விமானத்தை வைத்துக் காப்பாற்றுவதற்கும், அதை ஓட்டுபவர்கள் முதலானவர்கட்கு ஊதியம் கொடுப்பதற்கும், அதற்குத் தேவையான பெட்ரோல் முதலிய பொருள்களை வாங்குவதற்குமாக மாதாமாதம் சுமார் 6000 ரூபாய் செலவழித்து வந்தார்கள்.

இந்த வகையில் 1950-ம் ஆண்டு அக்டோபர் மாதம் வரையில் அந்த விமானத்திற்கென்று செலவழிக்கப்பட்டிருக்கிற தொகை 1,52,000 ரூபாய்.

அமைச்சர் பக்தவச்சலனாரே சென்னை சட்டசபையில் கொடுத்திருக்கிற கணக்கு, இது.

1950 அக்டோபருக்குப்பிறகு சென்ற மாதம் வரையிலே, அந்த விமானத்தை வைத்துக் காப்பாற்றிய வகையில், மாதம் ரூ 6000 என்ற கணக்குப்படி மேற்கொண்டு ஒரு இலட்சத்து எட்டாயிரம் ரூபாய் செலவாகி இருக்கும் என்று நாம் தாராளமாகக் கூறலாம்.

விமானத்தின் விலை—ரூபாய், 2,65,490.

1950 அக்டோபர் வரை, விமானத்தைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்ட செலவு—ரூ. 1,52,000.

1950 அக்டோபர் முதல் 1952 ஜனவரி வரை, ஏற்பட்ட செலவின் உத்தேச மதிப்பு ரூ. 1,08,000.

ஆகமொத்தம் இந்த விமானத்திற்காக வென்று, சென்னை சர்க்காரின் பொக்கிஷத்திலிருந்து செலவழிக்கப்பட்டிருக்கிற தொகை—ரூ. 5,25,490.

ஐந்து இலட்சத்து, இருபத்தையாயிரத்து, நானூற்றுத் தொண்ணூறு ரூபாய் செலவழித்து, சென்ற மூன்று ஆண்டுகளாக சென்னை காங்கிரஸ் அமைச்சர் போற்றிப் பாதுகாத்து வருகின்ற இந்த விமானத்தில் இவர்கள் எத்தனை முறை பயணம் செய்திருக்கிறார்கள் தெரியுமோ?

இரண்டே முறை!

மொத்தம் எத்தனை மணி நேரம் இதில் பறந்திருக்கிறார்கள் இவர்கள் என்பது தெரிய வேண்டுமா?

மூன்றேமுக்கால் மணி நேரம்!

இரண்டு முறை மட்டுமே பயணம் செய்து, மூன்று மணி நேரம் மட்டுமே பறந்து சென்றிருக்கிற இவர்கள், இதற்கென்று தனியாக ஒரு விமானத்தை சர்க்கார் செலவில் வாங்கி வைத்திருக்கத் தேவையில்லை.

சென்னை—டில்லி —பம்பாய்—கல்கத்தா ஆகிய முக்கிய நகரங்களுக்கு, தனிப்பட்ட கம்பெனிகளால் நடத்தப்படுகிற ஆகாய விமானங்கள், நாள்தோறும் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போய் வந்தபடி இருக்கின்றன.

இவர்கள் பிரயாணம் செய்திருக்கிற இந்த இரண்டே முறையும், அந்த விமானங்களில் ஏதாவது ஒன்றில், டிக்கட் வாங்கிக்கொண்டு பிரயாணம் செய்து விட்டு வந்திருக்கலாம்.

அப்படிச் செய்திருந்தால், இந்த இருமுறைப் பயணத்திற்குமாக மொத்தம் ஐயாயிரம் அல்லது பத்தாயிரம் ரூபாய்தான் செலவாகியிருக்கும்.

ஆனால்இப்போதோ மொத்தம் ஐந்து இலட்சத்து இருபத்தையாயிரம் செலவாகியிருக்கிறது.

ஆட்சியாளர்கள் வாங்கிய ஹனுமானின் வால் (செலவு) வளர்ந்த காரணத்தால் பொது மக்களின் வரிப்பணத்தில் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் வீணாக்கப்பட்டிருக்கிறது.

மக்களின் துயரத்தைத் துடைக்கக் கூடிய திட்டங்களுக்கெல்லாம் பணமில்லை என்ற பல்லவியைப் பாடி கையை விரித்துக் காட்டிவந்த சென்னை மந்திரிகள், இப்படி ஐந்து இலட்சம் ரூபாயை வீணாக்கியிருக்கிறார்களென்றால், இதைவிடப் பெருங் கொடுமை, வேறு இருக்கமுடியுமா?

தேசியவாதிகளே, விடை கூறுங்கள்!

"ஐந்து இலட்சம்தானே செலவாகியிருக்கிறது! இதென்ன பிரமாதம்! அந்த விமானத்தை விற்றுவிட்டால் போகிறது! விலைக்கு விற்றால், போட்ட பணம், திரும்பிவந்து விடுகிறது!" என்று, புன்னகை பூத்த முகத்துடனே, சில பாரத புத்திரர்கள் பதில் பேசக்கூடும்.

ஆனால் அவர்கள் அப்படியெல்லாம் விடைகூறித் தப்பித்துக் கொள்வதற்கும் வழியில்லாதபடி செய்துவிட்டார்கள் சென்னை சர்க்கார்.

சர்க்கார் 10—1—52 அன்று, ஹனுமானை, ஏலம் போட்டுப் பார்த்தார்கள்!

இரண்டே இரண்டு பேர்தான் அந்த விமானத்தை விலை கொடுத்து வாங்க முன்வந்தார்கள்.

ஆனால் அந்த இருவரிலே ஒருவர், குறைந்தது ஓராண்டுக் காலத்திற்கு விமானம் ஒழுங்காகப் பறக்கும் என்கிற உறுதிமொழியைக் கொடுப்பதாக இருந்தால்தான் நான் விலைக்கு வாங்குவேன் என்று கூறிவிட்டார்.

மற்றவரோ, "ரூபா முப்பதாயிரம்தான் நான் தரமுடியும் இந்த விமானத்திற்கு! கொடுத்தால் கொடுங்கள்! இல்லாவிட்டால் வேண்டாம்!"! என்று சொல்லிவிட்டார்!

(16-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நெறித்த பற்கள்—துடித்த உடல் அவன் நிலையை விளக்கின! தன் கொள்கை, கோட்பாடு, கோத்திரம், அவன் கருத்தைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தன. அவளை அணைத்தவன் ஓர் ஆரியனாக இருந்தால் 'காந்தர்வ விவாகம்' எனக் கருதியிருப்பான்! ஆனால் அவனோ முகம்மதியன்—'இழிந்த பிறவி' அவன் வர்ணாஸ்ரம தர்மப்படி! திப்புவின் அந்தப்புரம் நோக்கிச்சென்று கொண்டிருந்தான் மறைத்து விடுவதா அல்லது மறைமுகமாக இதற்கு ஏதாவது வழி காண்பதா என அவன் கருத்துக்கள் சுழன்று கொண்டிருந்தன. திப்புவின் அந்தப்புரத்தில் நுழைந்தான்.

"மறையவரே ஏன் முகம் மாறுபட்டிருக்கிறது?" என்றான் திப்பு.

"என் மானம் மறைந்து விட்டது!"

"தங்கள் வாயினின்று இந்தச் சொற்கள்? ஏன் பதறுகிறீர்கள்"

"பதறுவதா... அந்தப்பாவி என் மகளைக் கற்பழித்து விட்டான்"

"யார் அந்தத் திமிர் பிடித்தவன்?"

"அவன்தான் காசிம்"

"நல்லவனாயிற்றே அவன்"

"அந்த நயவஞ்சகன் தான்..."

"நான் கவனிக்கிறேன், கவலையை விடு" என்றான் திப்பு, அவ்வுரையாடலுக்குப் பின். காசிம் அழைக்கப்பட்டான். திப்புவால் விசாரிக்கப்பட்டான். நடந்ததை விளக்கினான் காசிம். திப்பு சிந்தித்தான். நீதியற்றவன் என்ற பழியை ஏற்றுக் கொள்ளாதே என்றது அவன் உள்ளம். வேதியன் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை அவனால். காசிம் கொல்லப்பட வேண்டும். தன் மகளை தன் விருப்பம்போல் நடத்திக் கொள்வான் வேதியன். அதாவது வேத விதியின்படி ஓம குண்டம் வளர்த்து "பிராயசித்தம்" செய்து, மீண்டும் குலத்தில் சேர்த்துக் கொள்வான். இது வேதியன் நீதி. இந்த **வேதியன் நீதியும் வேந்தன் நீதியும் மோதியது—போராட்டம்.** குற்றவாளிகள் என்றால் இருவரும் குற்றவாளிகள்தான். **கடமை, உண்மை இவைகளை நீதித்தராசிலே எடையிட்டான் மன்னன்! அப்பூசுரனோ சாதியையும் மதத்தையும் எடையிட்டான்! முடிவு?**

ஆரியன் நீதி ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சூழ்ச்சி அம்புகள், கருத்தெனும் அம்புறாத்தூணியிலிருந்து கிளம்பின. தன் மதன் வாயிலாகவே குற்றவாளியாக்க முயன்று கொண்டிருந்தான். ஆனால் ஆய்ந்து பார்த்த திப்பு 'தீவிர' முடிவுக்கு வந்தான். ஆரியனின் எண்ணத்தைச் சிதற அடித்தான். அவன் மனக் கண்முன் 'அக்பர்—பாபர்' காட்சியளித்தனர். சில நாட்கள் சிந்தித்து நல்ல முடிவுக்கு வர, காலம் அளித்திருந்தான் அவ்வேதியனுக்கு. ஆனால் அவனோ "சம்சார சத்கைங்கர்யத்"திற்கான ஏற்பாடுகளை உருவாக்கிக் கொண்டிருந்தான். குறிப்பிட்ட நாட்களில் மறுமொழி கிடைக்காமற் போகவே திப்பு தன் தொழிலினை நடத்தினான்! அதுதான் திருமணம் பூசுரன் மகளுக்கும் காசிமுக்கும்! திப்பு இதைத் துணிந்து 'பலாத்கார'மாகச் செய்தான். எதற்கும் அஞ்சாத வீரன் எதிர்காலத்தை எண்ணினானில்லை!

"என்னை அவமதித்தாய்—அழிவுப்பாதையை நோக்கிச் செல்கிறாய். என்னை எதிர்த்தவர் யாராயினும் இருக்குமிடம் தெரியாமல் உருக்குலைந்து போவர். உன் வீரம் இம்மறையவனை அசைக்க முடியாது. என் நெஞ்சு கொதித்தால் நீ வெந்து மடிவாய். உன் நீதி உன்னையே மாய்க்கும். மணம் முடித்து விட்டேன் என மகிழ்கிறாய். 'மரண சாசனம்' உன் மண்டலத்திற்கே உண்டாக்கி விட்டேன். உன் ஆத்திரம் அழியும்—ஆணவம் குலையும்......" என்று அவர் வேதவாய் கனல் மொழிகளைப் பொழிந்தது. திப்புவின் முன்னிலையிலல்ல! தனிமையில்!

அமைதி அவர் முகத்தில் குடிகொண்டது! அகமோ நஞ்சைக் கக்க நாள் பார்த்து கொண்டிருந்தது. ஏதோ வேலையை எப்பொழுதும்போல் செய்து கொண்டிருப்பது போல, அவைக்கு வருவதும் போவதுமாக இருந்துகொண்டிருந்தான். ஆனால் அவன் நடமாடும் நாகம் என அறியமுடியாமற் போயிற்று வீரன் திப்புவிற்கு.

ஓர் நாள் இரவு:—

நிலா காய்ந்துகொண்டிருந்தது. அன்று திருவிழா திப்புவின் மதக் கொள்கையின்படி. அரண்மனை, அதனைச் சூழ்ந்த மாளிகைகள் எங்கும் மகிழ்ச்சி மலர்ந்திருந்தது. கடைத்தெரு-ஊர்-கோட்டம் எங்கும் வேடிக்கைகள், இன்பக்களியாடல்கள். ஓர் புறத்திலே 'தொழுகை'யின் அமைதி. மாளிகைகளைச் சுற்றிய தெருக்களில் வண்டிகள் அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தன. கோட்டைக் கதவுகள் திறந்து விடப்பட்டிருந்தன. மக்கள் பேரொலிக்கிடையே, வெண்மையான திரைகள் தொங்கவிடப்பட்ட வண்டிகள் அமைதியாகப் போய்க்கொண்டிருந்தன. வெண்திரை தொங்கவிடப்பட்ட வண்டிகளுக்கு வழிவிட்டு மரியாதை காட்டினர் மக்கள். உள்ளே மகமதியப் பெண்களல்ல, வெள்ளையர்கள்!! பூர்ணய்யாவின் ஏற்பாடுதான் இது! துப்பாக்கி தாங்கிய வீரர்கள கோட்டைக்குள் நுழைந்தனர் திரை மறைவில்-முகமதியப் பெண்கள் போல!

இவ்விழா நேரத்தில் இந்நிகழ்ச்சியை எவரும் எதிர்பார்க்கவில்லை, கண்டு கொள்ளமுடியவில்லை! அவர்கள் தொகை குறைவுதான். எனினும் முக்கியமான இடத்தில் மூல இடத்தில் நுழைந்தார்கள். சென்னையிலிருந்த ஆங்கிலேயர்களுக்கு-அவர்தம் தளபதிக்கு அழைப்பு அனுப்பியிருந்தான் மைசூரை 'விருந்தாக்கிக் கொள்ள! அஞ்சலைத் தூதனுப்பியிருந்தான் படையெடுத்து வரும்படி. இடுக்கித் தாக்குதல் தந்திரத் திட்டங்கள் தெளிவாக்கப்பட்டிருந்தன. அதன் விளைவே வெள்ளை வீரர்களின் நுழைவு! உள்ளே நுழைந்த வீரர்கள் வெடிமருந்துச் சாலைகளிலெல்லாம் தண்ணீரை விட்டு 'பீரங்கிகளுக்குப் பயன்படுத்த முடியாமற் செய்துவிட்டனர். வெளியே நாட்டின் எல்லைப்புறங்களில் வெள்ளை வீரர்கள் தாக்குதலை நடத்திக் கொண்டு நெருங்கிக் கொண்டிருந்தனர். கோட்டையையும் முற்றுகையிட்டனர்.

இந்நிலையில் முதலமைச்சரைக் காணோம்! திகைத்தான் திப்பு. எனினும் மனங் குலைந்தானில்லை! படைகள் திரட்டப்பட்டன. போர் ஒலி கிளப்பினான். வெள்ளையர்தம் 'பீரங்கி'கள் நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தன. வேட்டு முழக்கம் விண்ணைப் பிளந்து கொண்டிருந்தது. நாடெல்லாம் போரின் எதிரொலி! திப்புவின் வீரர்களோ புலியெனப் பாய்ந்தனர். களத்தில் போரிட்டனர். ஆனால் நிலைமை தோல்வியை அணைத்துக் கொண்டிருந்தது. பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்ட வெள்ளைப் போர்ப்படை

சுற்று வட்டாரங்களில் சூறையாடிக் கொண்டு வந்தது. நாடு பிணக்காடாயிற்று! ஏற்கெனவே திப்புவுடன் வெற்றி காணாத ஆங்கிலத் தளபதி ஆரியனைத் துணை கொண்டதால் எளிதில் வெற்றிக்காண முடிந்தது. தொடர்ந்து பல நாள் போர்! வல்லூறுகள் பிணங்களை வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கழுகுகளும், நரிகளும் பிணவிருந்தைச் சுவைத்து வெளியேறின.

தோல்வி, அழிவின் துணை கொண்டு திப்புவை அணைத்தது. வேதனையும் வீரமும் நெளிய, முறுக்கிய வாள் மீசை துடிக்க வெண்புரவியின் மீதேறி வீரர்களுக்கு உணர்ச்சி ஊட்டிக் கொண்டிருந்தான். அவன் உடலில் காயங்கள். துப்பாக்கிக் குண்டுகள் துளைத்ததால் அவன் உடல் 'குருதிக்கண்ணீர்' சொரிந்து கொண்டிருந்தது. மனத்தளர்வின்றிப் போர் புரிந்துகொண்டிருந்தான். கடைசியாக வீழ்ந்தான்! தொடர்ந்து போரிட முடியவில்லை. அவனைத் தாங்கிய குதிரையும் குண்டுகளால் தாக்கப்பட்டு செங்குருதிச் சேற்றிலே வீழ்ந்து கிடந்தது.

ஓர் உருவம் கையிலே தாங்கிய வாளுடன் குருதி வழியத் தேடிக் கொண்டு அவனை நெருங்கிற்று. திப்புவை அவ்வுருவம் அள்ளித் தூக்கிற்று. தன் கண்களை அகல விரித்துப்பார்த்தான் திப்பு. 'ஆ... காசிம் நீயா?'' என்றது திப்புவின் குரல். காசிம்கண்கள் நீர்த்துளிகளைச் சிந்தின, ''என் மனைவி—மக்கள்...? ஆவலுடன் கேட்டான் திப்பு. ''அவர்களைக் காப்பாற்றிவிட்டேன், பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவிட்டேன்'' என நன்றியுடன்பதிலுரைத்தான் காசிம். ''என்னால்! அல்லவா...'' விம்மினான் காசிம் ''கலங்காதே கவலையை விடு இனிச் செய்ய வேண்டிய வேலையைக் கவனி. என் பரம்பரையைக் காப்பாற்று. எங்கே அந்த ஆரிய நய வஞ்சகன்? என் கையால் அவனைக்கொல்ல முடியாமற் போயிற்றே என வருந்துகிறேன். அந்தத் துரோகியைகாட்டிக் கொடுத்த நயவனைக்கொன்றிருந்தால் அமைதியாகச்சாவேன். நீயாவது'' எனக் கூறி முடிப்பதற்குள் அவன் உயிர் ஒடுக்கிற்று! நாடி அடங்கிற்று! புலி வீழ்ந்தது! 'போர்ச் சிங்கம்' என ஆங்கிலேயர்களால் கருதப்பட்ட மாவீரன் மாண்டான்! காசிம் தனியன் ஆனான்! அந்த ஆரிய அண்ணாவைக் காணோம்?..........!

பிணக்குவியலுக்கிடையே நடைப்பிணமாகச் சுமந்து தன் கடைசி மரியாதையைச் செய்தான். தன் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்கினான்! பாதுகாவலான இடத்தில் அடக்கம் செய்தான். திப்புவின் குடும்பத்தாரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். பழிக்குப் பழிவாங்காமல் விடமாட்டேன், என முணுமுணுத்தது அவன் வாய். ஆங்கிலேயர்களோ திப்புவின் குடும்பத்தாரைத் தேடிக் கொண்டிருந்தனர்.

அன்னியர் தாளடியில் வீழ்ந்தது மைசூர்! முடிவுற்றது முகலாயர் ஆட்சி! இந்து ஆதிக்கம் வளர்ந்தது. மீண்டும், முன்னிருந்த இந்து அரச பரம்பரையைச் சேர்ந்த ஒருவன் அரச பீடத்தில் ஏற்றப்பட்டான். பூர்ணய்யா திவானாக வீற்றிருந்தான். 'நான் எதிர்பார்த்த ஆட்சி மலர்ந்தது. கனவு நனவாயிற்று. என் நீதி வெற்றியடைந்தது' என உரத்த குரலில் கூவினான். அந்த ஆரியன்.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

**ஒரு குறிப்பிட்ட சாதியினர்மீது வெறுப்பும் பகைமையும் தமிழ்நாட்டில் ஏராளமாக வளர்ந்து விட்டது.''**

இதுதான் வரதாச்சாரியின் ஒப்பாரி!

செத்துப்போன மனிதனை எண்ணிப் பலரும் உள்ளம் உடைந்து கண்ணீர் சிந்துகிற நேரத்தில்கூட, அகப்பட்டதைச் சுருட்டிச் செல்லும் தங்களுடைய காரியத்திலேயே கண்ணாயிருந்த இரண்டு மாதரசிகளைப்போல, காங்கிரஸ் கட்சியின் திடீர் மரணத்தை எண்ணி எத்தனையோபேர் ஒப்பாரி வைக்கிற நேரத்தில்கூட, ஸ்ரீமான் வரதாச்சாரியின் உள்ளம் தன் சொந்த இனத்தின் சுக வாழ்வுக்கு ஆபத்து வந்துவிட்டதே என்கிற அந்த எண்ணத்தைத்தான் எண்ணி அழுகிறதே தவிர காங்கிரஸ் கட்சியின் படுதோல்வியை எண்ணி அழவில்லை.

இயற்கைதானே! எத்தவத்தைச் செய்தாலும் எவ்விடத்தில் இருந்தாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே என்பதுபோல, ஆரியர்கள் கூத்தாடினாலும் தங்கள் காரியத்தில் தானே கண்ணாயிருப்பர்! சர் ஆர்காட் இராமசாமியையும் சர் ஆர் கே சண்முகத்தையும் போலவா சொந்த இனத்தை மறந்த சுகபோகிகளாக இருப்பர்!

சர் ஆர்காட் இராமசாமியே சர். ஆர். கே. சண்முகமே! பாருங்கள் வரதாச்சாரியை! பாருங்கள் அவர்களுடைய இனப்பற்றை! என்று கூறுவதைத் தவிர வேறென்ன கூற இருக்கிறது நாம்!

ஆரிய குல மணிகள் எந்த இடத்திலே ஜொலித்துக்கொண்டிருந்தாலும், அந்த இடம் குப்பை மேடாக இருந்தாலும் சரி, அல்லது கோபுர உச்சியாக இருந்தாலும் சரி, தங்கள் இன வளர்ச்சிக்கான செயல்களைப் புரிய ஒருநாளும் தவறுவது கிடையாது.

ஆனால், திராவிட இன மாணிக்கங்களோ? இரண்டு படிக்கட்டு தாவி ஏறியவுடனே முதலில் தங்கள் இனத்தை மறந்துவிட்டுத்தானே பிறகு வேறு வேலை பார்க்கிறார்கள்?

இந்த நிலையில், "அந்த" இனம் வாழ்கிறது—நமது இனம் வதைகிறது என்றால் வதையாமல் என்ன செய்யும்?

# போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 23—2—52 சனிக்கிழமை


## பந்தல்லே பாவக்கா! பந்தல்லே பாவக்கா!

ஒருவீடு. அந்த வீட்டிலே ஒருவர் இறந்துவிட்டார் இறந்துவிட்டவரின் மனைவியைத் துக்கம் விசாரிக்கப் பலர் வந்தார்கள், வந்தவர்களிலே பெண்களாக இருந்தவர்களெல்லாம் இறந்தவரின் மனைவியுடன் அமர்ந்து அழுதார்கள். இழவு வீட்டிலே ஒப்பாரி வைத்து அழுவது தமிழ்நாட்டின் பழைய "பண்பாடு"களில் ஒன்று அல்லவா? அந்தப் பண்பாட்டிற்குப் பழுது இல்லாமல் பெண்மணிகள் அழுகைப் பாடல் பாடிக்கொண்டிருந்தார்கள்; இழவு வீட்டிலே ஒப்பாரி வைப்பவர்கள் எல்லோருமேவா இறந்துபோனவர்களை எண்ணி அழுகிறார்கள்? வேறு எதை எதையோ எண்ணிக் கொண்டு இறந்தவருக்காக அழுவதுபோலப் பாசாங்கு செய்பவர்களும் உண்டல்லவா? அந்த ரகத்தைச் சேர்ந்த இரண்டு மாதரசிகளும் இருந்தார்கள் அந்த அழுகைக் கூட்டத்திலே! எந்த இழவு வீட்டிற்குச் சென்றாலும், அங்கிருந்து எதையாவது திருடிக்கொண்டு போய்விடுவது அவர்களுடைய வாடிக்கை, அந்த வழக்கத்திற்கு விரோதமில்லாமல் இந்த வீட்டிலேயும் எதைத் திருடிக் கொண்டுபோவது என்று அவர்கள், ஒப்பாரி வைத்துக் கொண்டே, கண்களை அப்படியும் இப்படியும் பாய்ச்சினார்கள். இருவரில் ஒருத்தியின் கண்களுக்கு, வீட்டு வாசலில் சிறு பந்தல் இருப்பதும், அந்தப் பந்தலிலே பாகற்கொடி படர்ந்திருப்பதும், அந்தக் கொடியிலிருந்து பாகற்காய்கள் தொங்கிக்கொண்டிருப்பதும் தென்பட்டன. அவ்வளவுதான்! மீனைக் கண்ட கொக்கு சும்மா இருக்குமா? வீட்டிற்குப் போகும்போது அந்தப் பாகற்காய்களை அவள் பறித்துக் கொண்டு போய்விடவேண்டுமென்று முடிவு செய்துவிட்டாள். இதை மற்றவளுக்குத் தெரிவிக்க வேண்டாமா? எப்படித் தெரிவிப்பது? ஒப்பாரியோடு ஒப்பாரியாகப் பாடலானாள்:—

"பந்தல்லே பாவக்கா!
பந்தல்லே பாவக்கா!!"

செய்தி இன்னது என்பதை மற்றவள் புரிந்துகொண்டாள். அவள் உடனே பாடினாள்:

"போம்போது எடுத்துக்குவோம்!
போம்போது எடுத்துக்குவோம்!"

சென்னையிலே பிப்ரவரி பதினாறாம் நாளன்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் முக்யஸ்தர்களெல்லாம் ஒன்றுகூடி, சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி மரணமடைந்ததை முன்னிட்டு ஒப்பாரி வைத்து அழுதிருக்கிறார்கள். இவ்வளவு சீக்கிரம் சென்னை மாகாண காங்கிரஸ் மாரடைப்பால் மாண்டுபோகும் என்று நாங்கள் நினைக்கவில்லையே என்று சிலர் அழுதிருக்கிறார்கள். செத்துப்போன காங்கிரசுக்கு உயிரூட்டுவது எப்படி என்று வேறு சிலர் அழுதிருக்கிறார்கள். இப்போது இருக்கிற காங்கிரஸ் நிர்வாகிகளெல்லாம் விலகிக் கொண்டு புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தால்தான் காங்கிரஸ் உயிர்பெற்றெழும் என்று வேறு சிலர் அழுதிருக்கிறார்கள். எல்லோருமே காங்கிரஸ் கட்சியை எண்ணி அழுகிறார்களா? சிலர் "பந்தல்லே பாவக்கா" மனப்பான்மை உடையவர்கள்! அவர்கள் காங்கிரஸ் கட்சி மரணமடைந்ததற்காக அழவில்லை! வேறு எதை எதையோ எண்ணி அழுதிருக்கிறார்கள்! அவர்களிலே ஒருவர் ஸ்ரீமான் என். எஸ். வரதாச்சாரியார், காங்கிரஸ் கட்சி தேர்தல் வெடிகுண்டால் சுக்குநூறாகிவிட்டதே என்பதல்ல அவருக்கு உள்ள கவலை! காங்கிரஸ் கோட்டை கலகலத்துப் போய்விட்ட காரணத்தால், ஆரிய ஆதிபத்யத்திற்கு ஆபத்து அதிகமாகிவிட்டதே என்பதுதான் அவருடைய வேதனை! பிராமண இனத்தின் ஏகபோக ஆதிக்கத்தைப் போற்றிக் காப்பாற்றிவந்த பாதுகாப்பு மதில் இடிந்துபோய்விட்டதே என்பதுதான் அவருக்குள்ள துயரம்!

"காங்கிரஸ் கட்சி, சரியான முறையிலும் திறமையான வகையிலும் பணியாற்றாத காரணத்தால்,

(7-ம் பக்கம் பார்க்க)

# யார் அவர்கள்? யார்? யார்?

★

திராவிடநாடு தனிநாடாவதே எங்களுடைய இலட்சியம் என்று நெடுங்காலமாகச் சொல்லிக்கொண்டிருந்துவிட்டு, மிக முக்கியமான நேரமாகிய தேர்தல் வேளையிலே, அந்தப் பிரச்சினையையே அடியோடு மறந்துவிட்டவர்கள் யார்?

தேர்தல் நேரத்திலே தனிநாடு பிரச்சினையை மறந்துவிட்டு, பிறகு, எப்படியோ தேர்தலில் வெற்றிபெற்று வந்தவர்களைப் பார்த்து, நீங்கள் எங்களுடைய தனிநாடு பிரச்சினையைத் தயவு செய்து ஆதரிக்கமாட்டீர்களா என்று கெஞ்சிக் கேட்கும் உத்தமர்கள் யார்?

பலவகைப் பாசமும் நேசமும் அலைமோதிய தேர்தல் வேளையிலேகூட, தங்களுடைய இதய கீதமாகிய திராவிட நாட்டுப் பிரச்சினையை ஒப்புக்கொண்டு உறுதி கூறுபவர்களுக்கு மட்டுமே எங்களுடைய ஆதரவு என்று நெஞ்சு நிமிர்ந்து கூறிய மாவீரர்களைப் பார்த்து மனம் துணிந்து இழிமொழிகளை எடுத்துவீசிவிட்டு, அதே நேரத்தில், இன்னமும் திராவிடநாடு திராவிடருக்கே என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் யார்?

எந்தக் காரணத்தை முன்னிட்டும் பார்ப்பனர்களுக்கு ஓட்டுப் போடாதே என்று சொல்லிக்கொண்டே அதே நேரத்தில் செங்கல்பட்டில் சீனிவாச அய்யங்காருக்கும் தஞ்சாவூரில் ஆர். எஸ். சர்மாவுக்கும், சென்னையில் ராஜகோபாலாச்சாரிக்கும் ஓடி ஓடி ஓட்டுச் சேகரித்த புண்ணியமூர்த்திகள் யார்?

எல்லா இடங்களிலும் கம்யூனிஸ்டுகளுக்கே ஓட்டுப்போடுங்கள் என்று தினம் தினம் தீப்பொறி பறக்கும் நடையிலே ஒரு புறம் தலையங்கம் தீட்டிக்கொண்டே, மற்றோர் புறத்தில், ஈரோட்டில் பிரபல கம்யூனிஸ்ட் தலைவர் கே. டி. ராஜூவையும், சேலத்தில் மற்றொரு கம்யூனிஸ்ட் தலைவர் மோகன் குமாரமங்கலத்தையும் தோற்கடித்துக் காட்டவேண்டுமென்று அதிதீவிரப் பிரசாரம் புரிந்த அற்புத சித்தர்கள் யார்?

ஒழிக முதலாளித்வம், ஓங்குக சமதர்மம் என்று தொண்டை வறள வறளக் கூவிக்கொண்டே, தஞ்சைமாவட்டத்தில் பெருநிலச்சுவான்தாராகிய சாமியப்பாவைத் தங்கள் அபேட்சகர் என்று மனம் துணிந்து கூறிக்கொண்ட மகானுபாவர்கள் யார்?

பேசிவந்த கொள்கைகட்கு மாறாக நடந்துவிட்ட தலைவரைப் பின்பற்றிச் செல்ல எந்த இலட்சியவாதிதான் எப்படி ஒப்புக்கொள்ள முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளாமல், ஒரே தன்மை தேவை என்று ஓயாமல் எழுதிவருகின்ற "நல்ல மனிதர்கள்" யார்?

சோவியத் ரஷ்யா, செஞ்சீனா போன்ற நாடுகளில் சினிமாவின் மூலமாகப் புத்தறிவு எவ்வளவு வேகமாகப் பரப்பப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளும் தெளிவு இன்றி, இந்த நாட்டில் அதே பணியைப் புரிந்துவரும் மறுமலர்ச்சித் தூதுவர்களைப் பார்த்து சினிமா எழுத்தாளர்கள் என்று கேலி செய்துவரும் சற்குணசீலர்கள் யார்?

தங்கள் கட்சிக்காரர்கள் நாடகமாடுகிறபோது, நாடகத்துறைமூலமாக நாட்டில் நிச்சயம் மறுமலர்ச்சியை உண்டாக்க முடியும் என்று முந்திரிக்கொட்டை எழுத்தில் தலைவர் சொற்பொழிவை வெளியிட்டுவிட்டு, வேறு கட்சிக்காரர்கள் நாடகம் நடத்துகிறபோதுமட்டும், சேச்சே! அதுவும் ஒரு அரசியல் கட்சியா— வெறும் கூத்தாடிக் கட்சி என்று அதிர்வேட்டுக் கிளப்புகிற அரசியல் கோமாளிகள் யார்?

திராவிடநாடு திராவிடருக்கே—அதுதான் எங்கள் இலட்சியம் என்று பேசிக்கொண்டு, அதே நேரத்தில், இரண்டு இலட்சம் பேர்கூடி அந்த வீரமுழக்கத்தை எழுப்பிய மகத்தான மாநாட்டைக் குறித்து மூன்று வரிகூட எழுதாத முத்தண்ணாக்கள் யார்?

மற்றவர்கள்மீது வசைமாரி பொழிகின்ற விதத்திலே எழுதும் எழுத்து ஒன்றைத் தவிர மற்றபடி தன்னால் சிறுகதையோ நாடகக்கதையோ சினிமாக்கதையோ எதுவுமே எழுதமுடியவில்லையே, எழுதும் திறமையில்லையே என்பதை எண்ணி எண்ணி மனம் புழுங்கி, அந்தப்புழுக்கத்தின் காரணமாக, அந்தத் துறைகளிலே பெயரும் புகழும் பெற்று விளங்கும் சீர்திருத்த எழுத்தாளர்கள் மீது பொறாமைத் தீயைப் பாய்ச்சும் பொன்னான மனிதர்கள் யார்?

உலக நாடுகளின் மன்றமாகிய ஐ. நா. சபையிலே ஒரே ஒரு நாள்—அதுகூட வேண்டாம்—ஒரே ஒரு மணி நேரம், திராவிடநாடு பிரச்சினைபற்றிப் பேசப்பட்

(16-ம் பக்கம் பார்க்க)

# "காலை நட்சத்திரம்!"

[ தில்லை—தொல்காப்பியன் ]

"இதோ ஒரு மதத்துரோகி! இவனது உடல்தோல் உரிபட்டு, உரிபட்ட விடத்திலிருந்து இரத்தம் சாறாகப் பொழிந்து, அதனால் சக்தியொழிந்து செத்து விழும் வரையிலே மீன் சவுக்காலடியுங்கள்!"

"இதோ ஒரு சூனியக்காரி! மதபோதகத்தையும் அதனை முழுதுமுணர்ந்த மதவாதிகளையும், ஆலயங்களையும் அதனுள்ளிருக்கும் ஆண்டவன்களையுமே சந்தேகித்து நிந்தனோபதேசம் செய்யும் இவளது நெஞ்சைப் பிளந்து அதிலே நெருப்பையள்ளிக் கொட்டிப் பொசுக்குங்கள்!"

"இதோ ஒரு 'பாஷண்டன்'! மதத்தின் அடிப்படைத்திட்டங்களைத் தனது விஞ்ஞானத்தத்துதங்களால் தகர்த்தெறியும் இவனை, எரிகின்ற தீ மூட்டத்தின் நடுவிலே உயிரோடு தூக்கியெறியுங்கள்!"

இதோ ஒரு சமயத்தின் சத்துரு! சர்ச்சிற்கும் பிரார்த்தனைக்கும், புத்தகத்திற்கும் பூர்வீகப் பழக்க வழக்கங்களுக்கும் கட்டுப்படமுடியாதெனக் கூறிக் கூச்சலிட்டு நமக்கு எல்லையற்ற தொல்லைதரும் இவனைக் கல்லோடு பிணைத்துக் கட்டிக் காட்டாற்று வெள்ளச் சுழலிலே தூக்கியெறிந்து அதனடியிலே படிந்து கிடக்கும் மூர்க்க முதலைகளுக்கு விருந்தாக்குங்கள்!"

—இப்படி, தனது சுகபோக வாழ்க்கைக்குத் தடையாகவிருந்தவர்களை, "ஏன்?" "எதற்கு?" என்ற ஆராய்ச்சிக் கேள்விகளைக் கேட்டு, மதத்தின் குருட்டு நம்பிக்கைகளுக்கு அடிபணிய மறுத்தவர்களை, மூடப் பழக்க வழக்கங்கள் முறியடிக்கப்படவேண்டுமெனக் கூறியவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி மேற்கண்ட தீர்ப்புகளை வழங்கியது "மதவிசாரணை சபை"

* * *

பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையிலே, ஐரோப்பாக் கண்டத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த மதகுருமார்கள், போப்பாண்டவர்கள் — இவர்களையெதிர்த்துப் பேசுகின்ற அளவுக்குத் துணிவு கொண்ட மனிதன் எவனுமே தோன்றவில்லை; தோன்றினாலும், தூக்குமரங்களின் நினைவு நெஞ்சிலேயோடிய நேரத்தில் அவனுடைய துணிவெல்லாம் புயலிடைப் பட்ட தூசாகச் சுழன்றது; பலிபீடங்களின் பயங்கரச் சிரிப்பிலே அவனது நெஞ்சுரமெல்லாம் பஞ்சு பஞ்சாகப்பறந்தது; தீமூட்டங்களின் நினைவு தோன்றியபோது அவனது மனவுறுதி வெந்து சாம்பலாகியது.

ஆம்! போப்பாண்டவர்களின் வாயசைவிலே தங்களது வாழ்க்கை அடங்கிக் கிடப்பதாக மக்கள் எண்ணினார்கள்; மணிமுடி தரித்த மன்னர்கள் மதகுருமார்களைக்கண்டு அஞ்சி நடுங்கினார்கள். இந்த சூழ்நிலைகளுக்கிடையிலேயும் 'பகுத்தறிவுப் பகலவன்கள்' தோன்றத்தான் செய்தார்கள். ஆனால் அவர்களை முளையிலேயே கிள்ளியெறிந்து வளரவொட்டாமல் செய்வதற்கான கருத்தோடுதான் தோற்றுவிக்கப்பட்டது 'மதவிசாரணைசபை'. மதவெறி பிடித்த 'மகான்கள்' தான் அந்த விசாரணை சபையின் நீதிபதிகள். குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டவர்களைத் 'தீயிலே போட்டுப் பொசுக்கு' —என்பதுதான் அவர்கள் தந்த நீதிநெறிகள்.

இந்த மாதிரிக் காட்டுமிராண்டிகளின் கையிலே யகப்பட்ட பொம்மைகளாக நாட்டுமக்கள் சிக்கித் தவித்து நலிந்துகொண்டிருந்த நேரத்திலேதான் சீர்திருத்தச் சிங்கமொன்று தோன்றியது இங்கிலாந்திலே.

போப்பாண்டவருக்கும், மதகுருமார்களுக்கும் பெருந்தொல்லைகொடுத்த அவன் ஒரு பாதிரி! 1320-ம் ஆண்டிலே தோன்றியவன். அவனும் மதகுருமார்களில் ஒருவன்தானென்றாலும் மனிதத் தன்மையை யிழக்காதவன்; பாதிரிமார்களில் ஒருவன்தானென்றாலும், பகுத்தறிவை அடகுவைக்காதவன். அவனே ஒரு பாதிரியாக இருந்த காரணத்தினால்தான், அவர்களது பகட்டு வாழ்க்கையை நல்ல முறையிலே படம் பிடித்துக் காட்ட முடிந்தது.

அப்போதைய பாதிரிமார்கள் —மதகுருமார்களின் வாழ்க்கை, மக்களுக்கு நீதி போதிக்கவேண்டியவாகளின் வாழ்க்கை, பற்றற்ற தொண்டிலிறங்கி பரமனின் தொண்டர்களாக இருந்திருக்க வேண்டியவர்களின் வாழ்க்கை, மக்களால் போற்றப்பெற்று மகான்கள் என்று மதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை மகாமகா மட்டரகமானதாகவிருந்தது; தாங்கள் கையொப்பமிட்டுத் தருகின்ற 'பாப மன்னிப்புச் சீட்டுக்களை'ப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கிக்கொண்டால் மக்கள் செய்து

பாபங்களையெல்லாம் மகேசுவரன் மன்னித்துவிடுவாரெனக் கூறி ஏதுமறியா பக்தளை ஏமாற்றி, ஏராளமான பொருள் பறித்தார்கள் அவர்கள்.

அது மட்டுமல்ல; அப்போதைய மத குருமார்களின் சொந்த வாழ்க்கை சோரம் போனதாகவிருந்தது. மாதா கோயிலிலே மதபோதகம் செய்யவேண்டியவர்கள் மங்கையரின் தங்க மேனியிலே, தளிர் உடலிலே மகேசுவரன் 'இருக்கிறாரா?' 'இல்லையா?' என்ற தத்துவ ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தார்கள்! சர்ச்சுகளில் வேதபாராயணம் செய்ய வேண்டிய பாதிரிகளின் வாய்கள், கள்நாற்றத்தைக் கக்கிக் கொண்டிருந்தன! 'பைபிள்' நூல்களைத் தாங்கவேண்டிய சமயவாதிகளின் கைகள் சரசவல்லிகளின் துடியிடைகளை அளவெடுத்துக் கொண்டிருந்தன! போதனை நேரத்திலே, அமைதியையும் சாந்தத்தையும் இருப்பிடமாகக் கொண்டிருக்க வேண்டிய எம்பிரான்களின் அடியவர்களான தம்பிரான்களின் கண்கள் அடிக்கடி பெண்கள் பக்கம் திரும்பிக் காமத்தீயைக் கொட்டிக்கொண்டிருந்தன! எல்லாவற்றிற்கும் மேலாகப் 'புனிதத் தன்மையின் பிறப்பிடம்'—என்று அவர்கள் கூறிக்கொண்ட ஆண்டவனின் கோயிலையே தங்களது போகபோக்கிய லீலைகளுக்கும், பொழுது போக்கு விளையாட்டுக்களுக்கும் ஏற்றதான அரங்காக அமைத்துக்கொண்டார்கள் அந்த 'ஆழ்வாரடியார்கள்'!

இதையெல்லாம் நேரிலே கண்ட அந்த ஆங்கிலப் பாதிரிக்கு, மதவாழ்க்கை பெரும் வெறுப்பைத் தந்தது. கடவுள் என்ற கயிற்றால் மக்களனைவரையும் சேர்த்துக்கட்டி, அவர்கள் கட்டவிழ்த்துக்கொண்டு தப்பித்துவிடாதபடி மதம் என்ற பெருங்கல்லையும் அவர்களோடு சேர்த்துக்கட்டி, பக்தி மார்க்கம் என்ற ஆழந்தெரியாத கடலிலே தூக்கியெறிந்து, மனித வர்க்கம் மூச்சு விடமுடியாதபடி திக்குமுக்காடிச் சாகும்படிச் செய்துகொண்டிருந்த சமயவாதிகளையெதிர்த்துப் போர் முரசம் கொட்டினான் அந்தப் புத்துலகச் சிற்பி. 'பணத்தை வாங்கிக்கொண்டு பாபங்களை மன்னிக்கின்றவன் கடவுளாக இருக்க முடியுமா? இருந்தாலும் அப்படிப்பட்ட கடவுள்கள் நமக்குத் தேவையா?' என்ற ஆராய்ச்சிக் கேள்விகளை எழுப்பினான்; மாதா கோயில்களில் மதகுருமார்கள் செய்யும் அட்டூழியங்களை, அநியாயங்களை எடுத்துக்காட்டி, 'குருட்டு நம்பிக்கை' எனும் இருட்டு மண்டிக் கிடந்த மண்டைகளில் 'பகுத்தறிவு' எனும் பகலவனொளியைப் பரப்பினான். நாளுக்கு நாள் அவனுக்கு ஆதரவு பெருக ஆரம்பித்தது.

ஆதரவு பெருகுவதைக் கண்டதும், மதஸ்தாபனத்திற்கு அடிவயிற்றில் புளியைக் கரைத்தது. சொற்களினாலேயே அந்தப் பாதிரியையும் அவனது ஆதரவாளர்களையும் அழித்துவிடலாமென்றெண்ணியது. அவர்களைப், 'பிதற்றுபவர்கள்' (Lollards) என்று பட்டப்பெயர் சூட்டி, 'அந்தப் பயங்கரவாதிகளின், பைத்தியக் காரர்களின், பேச்சைக் கேட்காதீர்!'—என்று மக்களைப் பார்த்து அறைகூவல் விடுத்தது. ஆனால் அந்த அறைகூவலின் மூலம் எந்தவித மாற்றமும் மக்களிடம் ஏற்படாததைக் கண்ட 'மதஸ்தாபனம்,' 'மதவிசாரணைசபை' என்ற ஒரு சபையை நியமித்து, எதிர்ப்பாளர்களைக் கண்டிக்க எண்ணியது. 'எரிமூட்டத்திலே போட்டுக் கொளுத்துவது'தான் மதவிசாரணை சபையின் அகராதியிலே 'கண்டிப்பது' என்பதற்குப் பொருளாகும். அதன் முன்னிலையில் விசாரணைக்குச் சென்றவன் உயிரோடு திரும்பினான் என்ற வதந்தியைக்கூடக் கேட்கமுடியாது! அப்படிப்பட்ட நெறியற்ற நீதிதரும் மதவிசாரணை சபையின் முன் நிறுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான இளம் வாலிபர்கள், அந்த 'ஆங்கிலப் பாதிரியின்' ஆதரவாளர் கூட்டத்தைச் சேர்ந்த "லாலர்டுகள்" என்று குற்றம் சாட்டப்பட்டு தீ மூட்டத்திலே தூக்கியெறியப் பட்டார்கள்; 'மந்திரக்காரிகள்' எனப் பல பெண்களைக் குற்றம் சாட்டி 'சமூகத்திலே வாழத் தகுதியற்றவர்கள்' என்று மக்களே அவர்களைப் பற்றிக் கூறி, பீதியடையும்படி செய்து, கழுமரங்களிலே அவர்களை ஏற்றி அழகு பார்த்தது மதஸ்தானத்தின் மேன்தானமான மதவிசாரணை சபை. தொண்டர்களைத் தூக்கிலேற்றியதோடு, பருவக் கட்டுக்குலையாத இளைஞர்களைப் பலிபீடங்களுக்குக்காவு கொடுத்ததோடு, வாழ்க்கையை இன்னதென்றறியாத வாலிபர்களைத் தீக்கிரையாக்கியதோடு திருப்தியடைந்து விடவில்லை அந்த மதவிசாரணை சபை. "லாலர்டுகள்" கூட்டத்தின் தலைவனான அந்த ஆங்கிலப் பாதிரியையே உயிரோடு பிடித்துத் தீயிலே போட்டுப்பொசுக்கி அவனது பூண்டே இல்லாமல் ஒழித்துவிடக் கங்கணங் கட்டியது அது.

* * *

1384-ம் ஆண்டிலே ஒருநாள்; நல்ல இரவு நேரம்; இங்கிலாந்து நாட்டின் புதர்கள் அடர்ந்து

(15-ம் பக்கம் பார்க்க)

# செங்கோடா! செருப்பளவில் நில்!

மலர்ந்த தாமரை போன்ற முகம்! பிறை போன்ற நெற்றி! வில் போன்ற புருவம்! மான் போன்று மருளும் கண்கள்! கோவைப் பழம் போன்ற சிவந்த அதரம்! பொன் நிற மேனி! அந்த மேனியின் நிறத்தை மேலும் அழகுபடுத்தும் பலநிற ஆடை! காலில், அழகான செருப்பு! கையிலே விரித்துப் பிடிக்கப்பட்ட ஒரு குடை! இந்த நிலையுடையதாக ஓர் இளம் பெண்ணின் ஓவியம்!

மிகவும் அழகான முறையிலே ஓவியத்தைத் தீட்டினான் கைதேர்ந்த ஓவியன் ஒருவன்.

பலரும் கண்டு மகிழுமாறு, ஓவியத்தை, மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கக்கூடிய ஓர் இடத்தில் காட்சிக்கு வைத்தான்.

அவ் வழியே சென்ற பலரும் ஓவியத்தைக் கண்டனர். கண்டறியாததைக் கண்டோம் என்று களிப்புச் சிறந்து பாடினர். அற்புதம் அற்புதம் என்று கூறினர். வாழ்க இவ்வோவியன் என்று வாழ்த்தினர். ஓவியம் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும் என்று மனம் கசிந்து நவின்றனர்.

ஒரு சிலர்மட்டும் ஓவியத்தில் சிற்சில திருத்தங்கள் செய்தல் வேண்டும் என்று கூறினர்.

ஏனைய எல்லாம் மிகப்பொருத்தமாக இருக்கின்றன — கண்களை மட்டும்தான் இன்னும் சிறிது பெரியனவாக அமைத்தல் வேண்டும் என்றார் ஒருவர்.

காதுகளைக் கொஞ்சம் வளைக்க வேண்டும் என்றார் இன்னொருவர்.

நெற்றியிலே ஒரு குங்குமப் பொட்டு இருந்தால் அழகாக இருக்கும் என்றார் வேறொருவர்.

ஆடையின் நிறம் மேலும் கொஞ்சம் கருநீலமாக இருந்தால் நல்லது என்றார் மற்றொருவர்.

ஓவியன் யாருடைய திருத்தத்தையும் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டான். தேவையான திருத்தம் எதையும் யாரும் கூறவில்லை என்று சொல்லிவிட்டான்.

இறுதியாக, செங்கோடன் என்னும் பெயர் படைத்த செருப்புத் தொழிலாளி ஒருவன் அந்தப் பக்கம் வந்தான். ஓவியத்தைக் கண்டான்.

செருப்புத்தொழிலாளி அல்லவா? இயல்பாகவே அவன் கண்கள், ஓவிய நங்கையின் கால்களிலிருந்த செருப்பின் மீது படிந்தன.

உடனே அவன் ஓவியரை அழைத்து, 'ஐயா! இந்தச் செருப்புக்கு நீர் போட்டுள்ள தையல் பொருத்தமாக இல்லையே! இதை மாற்றி எழுத வேண்டும்'' என்றான்.

ஓவியன், செங்கோடனின் வார்த்தையைக் கேட்டு, அவன் கூறியபடி, ஓவியத்தில் உள்ள செருப்பின் தையலை மாற்றி எழுதினான்.

அவன் அப்படி எழுதியதுதான் தாமதம்—செங்கோடனுக்குப் பெருமை தாங்க முடியவில்லை. பெரிய பெரிய மனிதர்களெல்லாம் குறிப்பிட்ட திருத்தங்களை ஏற்றுக்கொள்ளாத ஓவியன், தான் குறிப்பிட்ட திருத்தத்தை உடனே ஏற்றுக் கொண்டான் என்பதை எண்ணி அவன் தலை துள்ளலாயிற்று. இனி, தான் எந்தத் திருத்தத்தைச் சொன்னாலும் ஓவியன் நிச்சயம் ஏற்றுக்கொள்வான் என்று அவன் எண்ணிவிட்டான். எண்ணவே, முகம் சற்று உருண்டையாக இருக்கவேண்டும், கூந்தலின் நீளம் கொஞ்சம் குறைக்கப்பட வேண்டும்—ஆடையின் நிறம் மாற்றப்படவேண்டும் என்று என்னென்னவோ திருத்தங்களைச் சொல்லத் தொடங்கி விட்டான்.

உடனே ஓவியனுக்குக் கோபம் பிறந்துவிட்டது.

''செங்கோடா! செருப்பளவில் நில்!' என்று உரக்கக் கூவினான் ஓவியன்.

''ஏன்?'' என்றான் செங்கோடன்.

''பைத்யக்காரா! நீ குறிப்பிட்ட ஒரு திருத்தத்தை ஏற்றுக் கொண்டதாலேயே நீ தெரிவிக்கும் எல்லாத் திருத்தங்களையும் ஒப்புக்கொள்வேன் என்று எண்ணிவிட்டாயா? நீ செருப்புத் தொழிலாளி! ஆகவே அந்தத் துறையிலே வல்லமை மிகுந்தவன்! நான் தீட்டிய செருப்பின் ஓவியத்திலே இருந்த தவறை எடுத்துக் காட்டினாய்! அதை எடுத்துக் காட்டும் உரிமை உனக்கு உண்டு அந்தத் துறையிலே நீ வல்லவன் ஆதலால்! ஆனால் வேறு துறைகளிலே எது குறை, எது சிறப்பு என்பது உனக்கென்ன தெரியும்? தெரியாததைப் பற்றி உளறாதே! உளறி உன் மதிப்பைக் கெடுத்துக் கொள்ளாதே'' என்று விளக்கம் கூறினான் ஓவியன்.

சிறந்த விஞ்ஞானி சர். சி. வி. ராமன், கோவை நகரில், 2—2—52 அன்று ஆற்றியிருக்கிற சொற்பொழிவு ஒன்றைக் கண்டதும் நமக்கு மேற்குறிப்பிட்ட கதைதான் நினைவுக்கு வந்தது.

சி. வி. ராமன், விஞ்ஞானத் துறையிலே தலை சிறந்த அறிவு படைத்தவர்.

உலக விஞ்ஞானிகளிலே ஒருவராக வைத்து எண்ணப்படுபவர்.

விஞ்ஞானத் துறையிலே இந்தியாவுக்குப் பெரும்புகழ் தேடிக் கொடுத்தவர்.

குறிப்பாக சூரியனின் ஒளிச் சுடர்களைப் பற்றிய அறிவியல் ஆராய்ச்சியிலே நிகரற்ற புலமை படைத்தவர்.

விஞ்ஞானத் துறைபற்றிய பிரச்சினைகளிலே அவருடைய கருத்துக்கு நாம் முழு மதிப்பு கொடுப்போம்.

அந்தத் துறைபற்றி அவர் வெளியிடும் கருத்துகளை நாம் தலை வணங்கி ஏற்றுக் கொள்வோம்.

சூரிய ஒளிச்சுடர்கள் குறித்து அவர் தெரிவிக்கும் முடிவுகளை நாம் மறுப்புக் கூறாது ஒப்புக் கொள்வோம்.

ஏனெனில் அந்தத் துறையிலே அவர் வல்லமை மிக்கவர், புலமை நிறைந்தவர், அனுபவம் வாய்ந்தவர்.

அந்தத் துறைபற்றி கருத்துக்கள் வெளியில் அதிகாரம் உடையவர் அவர். ஆகவேதான் அவர் அந்தத் துறைபற்றிய பொருள்கள் குறித்துப் பேசும்போது அந்தப் பேச்சிலே அழகு இருக்கிறது; ஆழம் இருக்கிறது, உண்மை இருக்-

கிறது, உயர்வு இருக்கிறது, நமக்கும் அவர்மீது மதிப்பு ஏற்படுகிறது, மரியாதை வளர்கிறது, அவரைப் போற்றிப் புகழவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

ஆனால் அவர் அந்தத் துறையை விட்டு விட்டு, அவருக்கு அறிமுகமும் அனுபவமும் இல்லாத வேறு துறைகளில் புகுந்து, தன்னுடைய "சித்தாந்தங்களை" வெளியிட முன்வரும் போதுதான், "சர் சி. வி. ராமனே! விஞ்ஞானத்தோடு நில்லுங்கள்!" என்று நாம் கூறவேண்டியிருக்கிறது.

வேறு துறைகள்பற்றி அவர்தன் கருத்துக்களை வெளியிடுகிறபோது, இவ்வளவு பெரிய அறிவாளியா இவ்வளவு மோசமாகப் பேசுகிறார் என்று நாம் மனம் வருந்திக் கூறவேண்டியிருக்கிறது. வேறு துறைகள் பற்றிய அவருடைய கருத்துக்கள் அவ்வளவு தவறாக இருக்கின்றன. அவ்வளவு மட்டமானவையாக அமைகின்றன.

2—2—52 அன்று கோயமுத்தூரில் இந்திய ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்தின் படத்தைத் திறந்து வைத்து ஒரு சொற்பொழிவு ஆற்றியிருக்கிறார் தோழர் சி. வி. ராமன்.

அந்தச் சொற்பொழிவின் முக்கியமான ஒரு பகுதியைப் படித்த போதுதான், "ஐயோ பாவம்! இந்த மனிதர் ஏன் தனக்குத் தெரியாத துறைகளிலே புகுந்து தன் பெயரை இப்படிக் கெடுத்துக் கொள்ளுகிறார்!" என்று நாம் சொல்லும்படி ஆகிவிட்டது.

காங்கிரஸ் ஆட்சியாளர்கள்தீட்டி 1951 ஜனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்துள்ள புதிய அரசியல் திட்டம் இருக்கிறதே, அந்தத் திட்டத்தின்படி, இந்திய ஜனாதிபதிக்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்கள், மிக மிக அதிகம்.

இந்தத் திட்டத்தின்படி, ஜனாதிபதி நினைத்தால், இந்தியாவில் உள்ள எந்த ஒரு மாகாண ஆட்சியாளரின் எந்த ஒரு அதிகாரத்தையும் அல்லது எல்லா அதிகாரங்களையும் தானே எடுத்துக்கொள்ளலாம்.

மாகாண கவர்னர்களின் எந்த ஒரு அதிகாரத்தையும் அல்லது எல்லா அதிகாரங்களையும் அவர் எடுத்துக்கொள்ளலாம்.

மாகாண சட்டசபைகளின் அதிகாரங்களை டில்லி பார்லிமெண்டுக்கு அவர் மாற்றிக் கொடுத்துவிடலாம்,

மத்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்குத் தரவேண்டிய தொகைகளை அவர் குறைத்துவிடலாம் அல்லது அடியோடு நிறுத்திவிடலாம்.

பேச்சுரிமை, எழுத்துரிமை, சங்கம் அமைக்கும் உரிமை முதலிய அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்காக நீதி மன்றம் செல்வதற்குப் பொது மக்களுக்கு இருக்கும் உரிமையை குறிப்பிட்ட சில காலங்களில், அவர் இல்லாமல் செய்துவிடலாம்.

ஏற்கனவே இந்த உரிமைகள் பற்றிய வழக்குகள் நீதிமன்றங்களில் இருந்தால் அவற்றின் விசாரணையை அவர் நிறுத்திவைக்கலாம்.

ஜனாதிபதி, கொஞ்சம் திறமை உடையவராக இருந்தால் ஒரு ஹிட்லராகவே ஆகிவிடலாம்.

அவ்வளவு ஏராளமான அதிகாரங்கள் அவருக்குத் தரப்பட்டிருக்கின்றன இந்தத் திட்டத்தின்படி.

இந்தத் திட்டத்தை ஒரு சர்வாதிகார சாசனம் என்று அரசியல் கலை நிபுணர்கள் அனைவரும் சித்தரித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு இந்தத் திட்டத்தின் கீழ் தரப்பட்டுள்ள அதிகாரங்கள் ஒரு சர்வாதிகாரிக்கு இருக்கக் கூடிய அளவைவிட அதிகமாகவே இருக்கின்ற காரணத்தால்தான் அவர்கள் அப்படிக் கூறியுள்ளனர்.

உண்மை இப்படி இருக்கும் போது; விஞ்ஞானி சி. வி. ராமன் கோவையில் பேசும்போது, "இந்திய ஜனாதிபதிக்குப் புதிய அரசியல் திட்டத்தின்படி தரப்பட்டுள்ள அதிகாரங்கள் மிகவும் கொஞ்சம் இவற்றை அதிகப்படுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்

ஜனாதிபதிக்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்கள்மிகவும்கொஞ்சமாம்!

மாகாண மந்திரிசபையைக் கலைத்துவிட்டு, சட்டசபையை மூடிவிட்டு, கவர்னரின் அதிகாரங்களை இல்லாமல்படி செய்துவிட்டு, நீதிமன்றங்களின் அதிகாரங்களைக் குறைத்துவிட்டு, மாகாண சர்க்காரை நிறுத்திவைத்துவிட்டு, எந்த ஒரு மாகாணத்தையும், ஜனாதிபதியே, அவர் ஒருவராகவே, நேரடியாக ஆட்சி புரியமுடியும் புதிய இந்திய அரசியல் திட்டப்படி!

இதற்குப் பெயர் கொஞ்சமான அதிகாரமாம்!

ஒரு மாகாண சர்க்காரையே கலைத்துவிட்டு, அதற்குப் பதிலாக தான் ஒருவராக ஆட்சி புரியும் அளவு ஏராளமான அதிகாரம் இருக்கிறது ஜனாதிபதிக்கு!

"இவ்வளவு குறைவான அதிகாரமா ஜனாதிபதிக்கு? ஐயோ பாவம்!" என்கிறார் சி. வி. ராமன்.

அரசியல் துறையிலே இவருக்கு இருக்கிற அறிவுப்பஞ்சம் எவ்வளவு அதிகம் என்பதைத்தான் இவருடைய கோவைச் சொற்பொழிவு நமக்கு நன்கு விளக்குகிறது.

இப்போது மட்டுமல்ல, அரசியல் துறைபற்றிய பொருள்களைக் குறித்து இவர் எப்போது பேசினாலும் இப்படித்தான் தப்புந்தவறுமாகக் குளறிவைக்கிறார்.

விஞ்ஞானியின் உள்ளத்திலே அஞ்ஞானம் ஏராளமாக இருக்கிறது...அரசியல் துறையைப் பொறுத்த அளவிலே!

ஆகவேதான் அவர் அரசியல் பொருள்கள்பற்றிப்பேசுகிற வேளைகளிலெல்லாம் நமக்கு "செங்கோடா! செருப்பளவில் நில்;" என்கிற கதை நினைவுக்கு வருகிறது.

நீங்களே சொல்லுங்கள், வராமல் இருக்குமா?

—


# போர்வாள், பகுத்தறிவுப் பாசறை

## அலுவலகங்கள்

நாம் முன்னரே அறிவித்திருந்தபடி, சென்ற வாரம் முதல், "போர்வாள்", பகுத்தறிவுப் பாசறை ஆகியவற்றின் அலுவலகங்கள், கீழ்க்கண்ட இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. எனவே, கடிதங்கள், மணியார்டர் முதலிய அனைத்தையும் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பவேண்டும்.

முகவரி:— 131, பிராட்வே, சென்னை 1.

# கோவையில் காங்கிரஸ் கொடுமைகள்

## இரா. நெடுஞ்செழியன் அறிக்கை.

12—2—52ல் கோவை சௌடம்மன் கும்பாபிஷேகப் பண்டிகையை ஒட்டிக் கொண்டாடப்பட்ட மஞ்சநீர் விளையாட்டைப் போர்வையாகக்கொண்டு கோவை காங்கிரஸ் காரர்கள் திராவிட முன்னேற்றக்கழகத் தோழர்களைப் பலவந்தமாக இழுத்துப்போட்டு அடித்தும், கழகத் தோழர்களின் சொத்துக்களுக்கு நஷ்டமுண்டாக்கியும், கழகக் கொடியை எரித்தும், கொடிக்கம்பத்தை வெட்டியும் நடத்திய இழி செயல்களைக் கேள்வியுற்று நேரில் விசாரித்தறிந்துவந்த தி.மு.க. பிரச்சாரக்குழுச் செயலாளர், தோழர், இரா. நெடுஞ்செழியன் கீழ்க்கண்ட அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ளார்:-

12-2-52ல் சௌடம்மன் பண்டிகையின் பேரால் காங்கிரஸ்காரர்கள் நடத்திய அட்டூழியங்களை நேரில் கேட்டறிய வந்தேன். கலகம் நடந்த இடங்களை 19—2—52-ம் நாள் காலை பார்வையிட்டேன். கேட்டறிந்த செய்திகளிலிருந்து கிடைப்பது என்னவென்றால், வளர்ந்து கொண்டே செல்லும் திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்படியேனும், அழித்து ஒழிக்க வேண்டும் என்று கங்கணங்கட்டிக் கொண்டிருந்த காங்கிரஸ் காரர்கள் பண்டிகையைப் போர்வையாக வைத்துக்கொண்டு அட்டகாசங்கள் அனைத்தையும் செய்து முடித்துவிட வேண்டும் என்று முன்கூட்டியே திட்டமிட்டிருப்பதாகத்தெரிய வருகிறது.

சௌடம்மன் பண்டிகைக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் யாதொருவித சம்பந்தமும் இல்லை என்பதோடு, பண்டிகையைப் பற்றிய கவலையும் இல்லாமலே இருந்து வந்திருக்கிறார்கள். பண்டிகையோடு சம்பந்தப்பட்ட மஞ்சள் நீர் விளையாட்டுக்கும், கழகத் தோழர்களுக்கும், எவ்வித தொடர்பும் இல்லை. மேலும் கழகத் தோழர்கள் மஞ்சள் நீர் விளையாட்டில் விருப்பம் கொள்ளும் தன்மையரும் அல்லர். அப்படியிருந்தும், வைதீக மனப்பான்மை கொண்ட காங்கிரஸ்காரர்கள் கழகத் தோழர்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்கள் மீது பலவந்தமாக மஞ்சள் நீர் ஊற்றியும், மஞ்சளைப், பூசியும்; மஞ்சள் நீரை ஏற்றுக்கொள்ள விரும்பாதவர்களைப் பலவந்தமாக இழுத்துப் போட்டு அடித்தும், உதைத்தும், சட்டையைக் கிழித்தும் இழிசெயல்களைப் புரிந்திருக்கிறார்கள், இந்தச்செயல்கள் மததர்மத்திற்கோ, அரசாங்க சட்டத்திற்கோ எவ்வகையில் பொருந்துகிறதோ தெரியவில்லை! பச்சை அரசியல் காலித்தனத்தைத் தவிர வேறு சமாதானம் எதுவும் இவற்றிற்குக் கூறுவதற்கில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தார் இதுவரையில் அமைதிக்குப் பங்கமாக நடந்து கொண்டார்கள் என்றோ, அல்லது காலித்தனம் நடந்த அன்று பலாத்காரமாக நடந்து கொண்டார்களென்றோ ஆதாரம் எதையும் நடுநிலைமையாளரும் காட்டமுடியாது. அரசாங்கக்குறிப்பும் காட்ட முடியாது. அப்படி இருந்தும் கழகத் தோழர்களான, என் வேல்சாமி, என். பின்னாசி, என். ருத்திரமணி கே. ராஜாமணி, பி. கே. பெருமாள், என். சோமு, எஸ். சோமசுந்தரம், எஸ். தேவராசன் ஆகியோரை அன்று பகல் 1-மணிக்குமேல் 3-மணிக்குள்ளாகப் பல்வேறு இடங்களில் அடித்திருக்கிறார்கள், காங்கிரஸ்காரர்கள். தோழர், ராமசாமி என்பவரின் கடையிலும் தட்டிகளைப் பிடுங்கி காலித்தனம் செய்திருக்கிறார்கள்.

தோழர், சோமு. என்பவரின் சைக்கிள் கடையில் இருந்தகொடிக்கம்பத்தை அகற்றிக் கொடியை நெருப்பு வைத்துக் கொளுத்தியுள்ளார்கள்.

என். வேல்சாமி என்பவரின் கடையிலும் தட்டிகளைப் பிடுங்கி காலித்தனம் செய்திருக்கிறார்கள்.

தெப்பகுளம் மைதானத்தில் நின்றிருந்த 60 அடி உயரமுள்ள பாக்கு மரத்தை அடியோடு முறித்து எறிந்தனர். கழகக் கட்டிடம் பூட்டியிருந்தும், பக்கத்து வீட்டின் வழியாக கட்டிடத்தின் மாடியில் ஏறி, கழகக்கொடியை அகற்றி நெருப்பு வைத்துக் கொளுத்தியுள்ளனர். இவ்வளவையும் செய்திருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள் மதத்தின் போர்வையில், காங்கிரஸின் பேரால் என்று கலகம் நடந்ததோ அன்று மாலை தெப்பகுளம் மைதானத்தில் காங்கிரஸ்காரர்களின் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. அந்தக் கூட்டம் அமைதியான முறையில் நடைபெறும் வகையில் தி மு. கழகத்தார் பொறுமையைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள், ஆனால் அதே மைதானத்தில் 17—2—52ல் தி. மு. கழகத்தார் கூட்டம் போட முயன்றபோது, போலீஸார் தடை செய்துள்ளனர். 144-தடையுத்தரவு வாரண்ட் கொடுக்காமலே, கழகத் தோழர்கள் ஆறுபேரை போலீஸார் கைது செய்துள்ளனர். இவற்றையெல்லாம் பார்க்கும்போது நாட்டில் நீதியும், நிர்வாகமும், உறங்கிக்கொண்டிருக்கின்றனவா என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது! ஆளும் கட்சியாகிய காங்கிரஸுக்கு ஒரு நீதி, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வேறோர் நீதியா? ஆளும் கட்சியார் என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? அவர்கள் என்ன செய்தாலும் கேள்வி கேட்பாடே இல்லையா? நீதியும் நிர்வாகமும் பதிலளிக்க மறுத்தாலும், மறந்தாலும் பொது மக்கள் மன்றம் நல்ல தீர்ப்பை வழங்கும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

12—2—52ல் கழகத்தோழர்கள் கண்ணியமாக நடந்து கொண்டார்கள் என்பதை அறிய பூரிப்படைகிறேன். கண்ணியம் நல்ல தீர்ப்பை வாங்கித் தருமாதலால், கழகத் தோழர்களனைவரையும் அமைதியான முறையில் கட்டுப்பாட்டுடன், நீதி வழி நடந்து கொள்ள வேண்டுகிறேன்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடக்கும் ஒரு பெருந்தோட்டம்; அதனைச்சுற்றிலும் உயர்ந்த மதில் சுவர்கள்; தோட்டத்தின் நடுப்பகுதியிலிருந்து நெருப்புப் பொறிகள் பறக்கின்றன; பொறி பறக்குமிடத்தின் நேர்கீழே காடு பற்றிக்கொண்டு எரிவதுபோல் காணப்படுகிறது; தீச் சுவாலைகள் தகதகவென வெளிவந்து கொழுந்துவிட்டு எரிகின்றது; இன்னும் சற்று நெருங்கிப் பார்த்தால் யாரோ வேண்டுமென்றே பெருங் கட்டைகளை அடுக்கி வைத்துத் தீமூட்டியிருப்பது நன்றாக விளங்கும்; திடீரென்று ஒரு வாடை; ஆம்! பிணவாடை! செத்த பிணமொன்று பொசுக்கப்பட்டிருக்கிறது; இல்லை யில்லை! உயிரோடு கொளுத்தியிருக்கிறார்கள்! கொளுத்தப்பட்டவன் வேறு யாருமல்ல;— அந்த ஆங்கிலப் பாதிரிதான்! 'பிதற்றுபவர்களின்' (லர்லாடுகள்) தலைவன்தான்! பகுத்தறிவுத் தந்தைதான்! எப்படியோ அகப்பட்டுவிட்டான்!

"ஏ சிரிக்கின்ற மதஸ்தாபனமே! இந்த, ஒரு ஜான் வைகிளிப் (John Wycliffe) பைத் தீயிலே போட்டுப் பொசுக்கிவிட்டதால் எதிர்ப்புச் சக்திகளைப் பூண்டோடு களைந்துவிட்டதாகக் கருதாதே! அதோ பல்லாயிரக்கணக்கான பகுத்தறிவுப் பட்டாளங்கள் உனது கோட்டை கொத்தளங்களை நோக்கிப் படையெடுத்து வருகின்றன பார்! இன்னும் சற்று நேரத்திலே உனது மாடமாளிகைகளெல்லாம் மண்ணோடு மண்ணாகி மடியப்போவதை உன் கண்ணாலேயே காணப்போகிறாய் பார்!"—என்று தீமூட்டத்தின் நடுவிலிருந்து ஒரு குரலெழுந்தது.

அது, அந்த ஆங்கிலப் பாதிரியின் குரல்தான்; அந்த ஜான் வைகிளிப்புதான் "சீர்திருத்த வானில் மின்னும் காலை நட்சத்திரம்" (The morning star of the reformation) என்று பிற்கால வரலாற்றிலே, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பட்டவன்; ஆம்! அவன் 'சீர்திருத்த நட்சத்திரம்' தான்! அதுவும் "காலை நட்சத்திரம்!"

---

# சென்னை மாகாணம்

## தேர்தல் கண்ணாடி

| | |
|---|---|
| சென்னை மாகாண சட்டசபைக்குரிய மொத்த ஸ்தானங்கள் | 375 |
| காங்கிரஸ் கட்சி பெற்றிருக்கிற ஸ்தானங்கள் | 152 |
| காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள்பெற்றிருக்கிற ஸ்தானங்கள் | 223 |

★

| | |
|---|---|
| சென்னை மாகாணத்தில் மொத்தம் பதிவாகியிருக்கிற ஓட்டுகள் | 1,92,65,011 |
| இவற்றில், காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்திருக்கிற ஓட்டுகள் | 66,77,588 |
| காங்கிரஸ் எதிர்ப்பாளர்களுக்குக் கிடைத்திருக்கிற ஓட்டுகள் | 1,25,87,423 |

★

| | |
|---|---|
| மொத்த ஓட்டுகளில் காங்கிரஸ் கட்சிக்குக்கிடைத்திருக்கிற ஓட்டுகள் 100-க்கு | 35 |
| காங்கிரஸ் எதிர்ப்பாளர்கட்குக் கிடைத்திருக்கிற ஓட்டுகள், 100-க்கு | 65 |

★

| | |
|---|---|
| டில்லி பார்லிமெண்டில் சென்னை மாகாணத்திற்குரிய ஸ்தானங்கள் | 75 |
| இவற்றில் காங்கிரஸ் கட்சி பெற்றிருக்கிற ஸ்தானங்கள் | 35 |
| காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் | 40 |

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

டால்கூட, அகிலஉலகத்தின்கவனத்தையும் கவரும் அளவுக்கு அந்தப் பிரச்சினைக்கு முக்யத்துவம் ஏற்பட்டுவிடும் என்பதை மறந்து விட்டு, ஐ. நா. சபையில் பேசப்படுவதாலேயே திராவிட நாடுகிடைத்துவிடுமா என்றுசிறு பிள்ளைப் பேச்சுப் பேசும் குள்ள உள்ளத்தினர் யார்?

திராவிடநாடு பெறுவதற்குப் பற்பல முனைகளிலேயும் நாம் போராடவேண்டும், அதிலே ஒரு முனை, சட்டசபை என்கிற சாதாரண உண்மையைப் புரிந்து கொள்கிற சக்திகூட இல்லாமல் சட்டசபையிலிருந்து எடுத்து வரக்கூடிய புளிமூட்டையா திராவிடநாடு என்று கேட்கிற பல சரக்கு மூட்டைகள் யார்?

நெடுங்காலமாக நாம் இருக்கிறோம்—நம்மைச் சீந்துவாரைக் காணோம்! ஆனால் நேற்று வந்து இன்று பேச்சாளர் ஆனதுகளுக்கு இவ்வளவு செல்வாக்கா நாட்டிலே என்று அழுக்காறு கொண்டு அலைந்து, அந்த அழுக்காறு காரணமாகத் தன் பேனா முனையிலிருந்து விஷ ஆற்றைப் பாய்ச்சுகின்ற விஷ எழுத்தாளர்கள் யார்?

யார் அவர்கள்?

யார்? யார்?

(5-ம பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, இந்த விமானத்தை விற்றால், ரூபா முப்பதாயிரம் தான் சர்க்காருக்குக் கிடைக்கும். ஆனால் சர்க்கார், இந்த விமானத்திற்கென்று இதுவரை செலவழித்திருக்கிற தொகை யோ ஐந்து இலட்சத்து இருபத்தையாயிரம்!

எனவே, கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் ரூபாயை, இந்த மந்திரிகள் வீணுக்கு இறைத்திருக்கிறார்கள். இந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது.

அந்த ஐந்து இலட்சம், இந்த அமைச்சர்களின் சொந்தப்பணமல்ல—சொந்தப் பணமாயிருந்தால் ஒவ்வொரு பைசாவையும் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றியிருக்கமாட்டார்களா — அது அவ்வளவும் சர்க்காரின் பணம்! அதாவது பொதுமக்களின் பணம்! நம் பணம்! எனவே தான் இப்படி அத்தனைப் பெருந் தொகையை வீணாக்கியிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம், கிடைத்த பணத்தை வீண் செலக்கு இரையாக்கிவிட்டு, பிறகு, அவசியமான திட்டங்களுக்குப் பணம் கிடைக்கவில்லை என்றால் எப்படிக் கிடைக்கும்?


விற்பனையாகிறது!

ஊஞ்சல்

நா. அறிவழகன் எழுதிய

* அரிய நிகழ்ச்சிகள் நிறைந்த அற்புதமான கதை!
* இனிமை ததும்பும் எளிய தமிழ் நடை!
* உள்ளத்தைக் கிள்ளும் உணர்ச்சிக் கருத்துக்கள்!
* கண் கவர் மேலட்டை!

தனிப் பிரதி பத்து அணாதான்!

விவரங்கட்கு:—

புதுமை நிலையம்,
தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி.

அடுத்த வெளியீடு:

கோலைத் தண்டனை
(நா. அறிவழகன்)



போர்வாள்

சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 6—8—0 |
| 6 மாதம் | ரூ. | 3—4—0 |

போர்வாள் அலுவலகம்
131, பிராட்வே, சென்னை 1.



## அறிவுக்கு விருந்து!

அரியதோர் வாய்ப்பு!!

| | | |
|---|---|---|
| வாழ்க்கையில் வெற்றி | 2 | 8 |
| முன்னேறுவது எப்படி | 2 | 8 |
| வாழ்வைத் துவக்கு | 2 | 8 |
| முஸ்லிம் சமுதாய சிற்பிகள் | 2 | 0 |
| இஸ்லாமிய திலகங்கள் | 2 | 12 |
| கவலைப்படாதே | 2 | 8 |

நாவலன் தீட்டியவை

| | | |
|---|---|---|
| கானகத்திலே காதல் | 1 | 12 |
| செல்வ குமாரி | 1 | 0 |
| அழகு நிலா | 1 | 0 |
| அந்த இரவு | 0 | 8 |
| அன்னியன் | 0 | 8 |
| நடிகன் | 0 | 8 |
| வாத்தியாரம்மா | 0 | 4 |
| ஆள்வோர் யார் | 0 | 4 |
| தாய் | 0 | 4 |
| வாழும் உரிமை | 0 | 3 |

பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| வஞ்சக வலை | 0 | 10 |
| உரிமைப் போர் | 0 | 12 |
| சிறந்த பேச்சாளர்கள் | 1 | 0 |
| பேச்சுக்கலை | 1 | 0 |
| வானொலியிலே | 1 | 0 |
| இலவுகாத்த கிளி (கார்க்கி) | 1 | 0 |
| எது நாகரிகம் ,, | 0 | 12 |
| லெனினுடன் சில நாட்கள் | 1 | 0 |
| சாம்பாஜி (ஏ.கே. வேலன்) | 1 | 0 |
| கைதி ,, | 1 | 4 |
| கன்னியா விதவையா | 0 | 8 |
| சமுதாய பலி பீடம் | 0 | 3 |
| கலிங்கத்து இளவரசி | 0 | 8 |
| பழி | 0 | 4 |
| காதலர் பாதையில் | 0 | 5 |
| 144 | 0 | 8 |
| பெரிய இடத்து செய்தி | 0 | 4 |
| நமது கடவுள்கள் | 0 | 4 |
| எதிர்ப்பிலே வளர்ந்த இயக்கம் | 0 | 8 |
| கடவுள் எங்கே | 0 | 4 |
| பிரெஞ்சு புரட்சி | 0 | 8 |
| அண்ணாவின் விரோதிகள் (கண்ணன்) | 0 | 4 |
| பூரிப்பு முத்தம் ,, | 0 | 4 |
| சிந்தனைச் சித்திரம் ,, | 0 | 10 |
| மவீரர் மா. சே. துங் | 0 | 4 |
| அறிஞர் அண்ணா | 0 | 2 |
| தன் மதிப்பியக்க தோன்றல்கள் (ஜீவா) | 0 | 8 |
| வேலைக்காரி | 1 | 0 |

பகுத்தறிவுப் பாசறை
131 பிராட்வே சென்னை 1.


Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Freej Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)